Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 104 | வியாழக்கிழமை 10 மார்ச் 2022 | மாசி 26 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 675
மொத்தம் 6,54,336

**உயிரிழப்பு**
நேற்று 11
மொத்தம் 16,361

## மின்வெட்டு!

கொழும்பு, மார்ச் 10
இன்றும் நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 15

## வாக்குக்கேட்டு வந்தால் தும்புத்தடி தூக்குவோம்

### அரசுக்கு எதிராக சிங்கள மக்கள் ஆவேசம்

காலி, மார்ச் 10
நீங்கள் வெற்றி பெறுவதற்காக நாம் எவ்வளவோ செய்தோம். ஆனால் இன்று எம்மை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இனி வாக்குக் கேட்டு வந்தால் தும்புத்தடி தான் தூக்குவோம். இவ்வாறு காலி மாவட்டம் ஹிக்கடுவ பிரதேச மக்கள் நேற்றுத் தெரிவித்துள்ளனர். 15

## கட்டுத்துவக்கு வெடித்து முல்லையில் ஒருவர் சாவு!

முல்லைத்தீவு, மார்ச் 10
எதிர்பாராதவிதமாக கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை முல்லைத்தீவு, நெட்டாங்கண்டல் பிரதேசத்துக்கு உட்பட்ட, சிராட்டிக்குளத்தில் நடந்துள்ளது.
இந்தச் சம்பவத்தில் நெட்டாங்கண்டல், உழவனேரியைச் சேர்ந்த தர்மலிங்கம் இளங்கோ (வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளார். 15

முச்சந்தி முரளி



"அப்ப இவையள் கடிதம் போடேலை எண்டுதான் இந்தியா கோபத்தில ஒண்டும் செய்யாமல் இருந்ததாமோ?"

# 367 பொருள்களின் இறக்குமதிக்கு தடை

★ வெளியானது வர்த்தமானி
★ நெருக்கடியைச் சமாளிக்க முயற்சியாம்
★ பொருள்களின் விலைகள் அதிகரிக்கும்

**கொழும்பு, மார்ச் 10**

**இலங்கை அரசாங்கத்தால் அத்தியாவசியமற்றவை என்று கருதப்படும் 367 பொருள்களுக்கு இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த இறக்குமதித் தடை நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருகின்றது என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.** 15

## கச்சதீவு பெருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்., மார்ச் 10
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களின் பங்கேற்புடன் இம்முறை 11

## இந்தியாவின் நகர்வுகளுக்கு கடிதமும் காரணமாகலாம்!

### விக்னேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 10
இந்தியா தற்போது இலங்கைக்குப் பொருளாதார உதவிகளை வழங்குவதற்கும், இலங்கை அரசுக்கு நிபந்தனைகளை விதிப்பதற்கும் தமிழ்க் கட்சிகள் 11

## கூட்டமைப்பின் நடவடிக்கை காலம்கடந்த செயற்பாடு



யாழ்ப்பாணம், மார்ச் 10
நல்லாட்சி காலத்தில் அரசாங்கத்தோடு சேர்ந்து இயங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தங்களது நண்பரைப் பாதுகாக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரவில்லை. காலம் கடந்தாவது 15

## பட்டினிச் சாவு வருமுன்னர் அரசு பதவி விலக வேண்டும்!

### வலியுறுத்துகின்றார் சந்திரிகா



கொழும்பு, மார்ச் 10
இலங்கையின் தற்போதைய நிலைமை படுமோசமடைந்துள்ளது. இந்தப் பேராபத்திலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசிடம் எந்தத்திட்டங்களும் இல்லை. பட்டினியால் மக்கள் மடிவதற்கு முன்னர் அரசு உடன் பதவி 15

## மருந்துப் பொருள்கள் விலைகளில் மாற்றம்

### இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 10
டொலரின் விற்பனை விலை அதிகரிப்புக்கு ஏற்ப மருந்துப் பொருள்களின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று இராஜாங்க அமைச்சர் 15

## பேரறிவாளனுக்கு பிணை!!

### 32 வருட சிறைவாசத்துக்கு முடிவு

சென்னை, மார்ச் 10
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டுள்ள பேரறிவாளனுக்கு பிணை வழங்கியுள்ளது சென்னை உச்ச நீதிமன்றம்.
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை 15

## ஆட்டத்தை ஆரம்பித்தார் கீதநாத்!

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை உடனடியாக கூட்டுமாறு மாவட்டச் செயலருக்கு பிரதமர் அலுவலகத்திலிருந்து கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ்ப்பாண மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை உடனடியாகக் கூட்டுவதற்கு 15

முள்ளிமலையில்

## இரவோடு இரவாக பிக்குகள் விகாரை அமைக்க முயற்சி!

### மக்களின் கடும் எதிர்ப்பால் நிறுத்தம்

அம்பாறை, மார்ச் 10
அம்பாறை, பாலமுனையில் உள்ள முள்ளிமலையில் பௌத்த விகாரை அமைக்க எடுக்கப்பட்ட திடீர் முயற்சி பிரதேச மக்களின் கடும் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக அங்கு அத்திபாரம் வெட்டி விகாரை 15

## மருத்துவபீட மாணவி என ஏமாற்றியவர் மறியலில்!

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட போலி அடையாள அட்டையைக் காண்பித்து வாடகைக்கு 11

# ஜெனிவா பொறிமுறை இலங்கைக்கு பொருந்தாது



- நல்லிணக்கத்துக்கு தடையாக அமையும் என்கிறது இலங்கை
- மனித உரிமை மாநாட்டில் வெற்றி எனவும் கூஹுரை

கொழும்பு, மார்ச் 10

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை இலக்கு வைக்கப்படுவதால், வாக்கெடுப்புகளின்போது சர்வதேச நாடுகள் மூன்று அணிகளாகப் பிளவுபடுகின்றன. அதனால் உள்நாட்டிலும் பிளவுகள் ஏற்படுகின்றன. பழைய புண் மீண்டும் தோண்டப்படுகின்றது. நல்லிணக்க முயற்சி என்பது இதுவல்ல. உள்ளகப் பொறிமுறை ஊடாகவே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தமுடியும் - என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு, ஜெனிவா மாநாட்டில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், குறித்த மாநாட்டில் இலங்கைக்கு வெற்றி கிடைத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதத்தில் பங்கேற்ற 45 நாடுகளில் 31 நாடுகள் இலங்கையின் நிலைப்பாட்டை அனுமதித்தன- ஆதரவு தெரிவித்தன. இலங்கையின் நிலைப்பாடு நியாயமானது. அதனை சர்வதேசம் ஏற்கவேண்டும் என மேற்படி நாடுகளின் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர். இது இலங்கை குழுவினர் கூட்டு முயற்சி கூட்டு பொறுப்புக்கு கிடைத்த வெற்றியாகும். ஐந்து பிரதான விடயங்களை முன்வைத்து, அது தொடர்பில் சர்வதேச நாடுகளிடம் நீதி கேட்டிருந்தேன்.

முதலாவதாக இன்றைய உலக நிலை பற்றி சிந்திக்கப் பாருங்கள். உலகநாடுகளில் பல பிரச்சினைகள் உள்ளன. ஐரோப்பாவில் பெரும் இடம்பெயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை விவகாரம் பற்றி மட்டும் ஏன் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது? இலங்கையில் இன்று உள்ள பிரச்சினைதான் என்ன? எமது நாடு தொடர்பில் கவனம் செலுத்த செலவிடப்படும் நேரம், வளம், முயற்சி ஆகியவற்றால் என்ன பயன் கிடைக்கப்போகின்றன? எனக் கேட்டேன். இதற்கு வரவேற்பு கிடைத்தது. 2ஆவது விடயமாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களில் 80 வீதமானவை உள்விவகாரங்களுடன் தொடர்புபட்டவை. அவை எந்தவிதத்திலும் சர்வதேசத்துடன் தொடர்புபட்டவை அல்ல. இது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் விடயதானத்துக்கு அப்பாற்பட்ட விடயம் எனவும் சுட்டிக்காட்டினேன். தேவையற்ற தலையீடுகளை சர்வதேச சமூகம் ஏற்கின்றதா? எனக் கேட்டேன். மூன்றாவது விடயமாக, இலங்கையின் உள்விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றதெனில், பிற நாடுகளுக்கு ஏன் அந்த அணுகுமுறை கையாளப்படுவதில்லை, அதில் உள்ள விசேடம் என்ன? எதற்காக இலங்கை மட்டும் இலக்கு வைக்கப்படுகின்றது? இந்த அணுகுமுறையை ஏற்கமுடியாது என அறிவித்தேன்.

4ஆவதாக உலகில் இன்று 50 வீத மானோருக்கு தடுப்பூசி இல்லை. இந்த நிலையில் எதற்காக இலங்கையை இலக்கு வைத்து அதிகளவு பணம் செலவிடப்படுகின்றது? எனவும் வினா எழுப்பினேன்.

5ஆவதாக இவ்வாறு செலவளிக்கப்படும் பணத்தால் பயன் உள்ளதா?, வாக்கெடுப்பின்போது சர்வதேசம் மூன்று அணிகளாகப் பிளவுபடுகின்றன, 2012இல் இருந்தே இது நடக்கின்றது. இலங்கைக்குள்ளும் பிளவு ஏற்படுகின்றது. பழைய புண் தோண்டப்படுகின்றது. இது நல்லிணக்கம் அல்ல. நல்லிணக்கம் என்பது முன்னோக்கிச் செல்வது. அதற்கான பொறிமுறை அந்த நாட்டின் கலாசாரத்துக்கேற்பவே உருவாக்கப்பட வேண்டும். ஜெனிவா தயாரிப்பு ஏற்புடையது அல்ல. 45 நாடுகளில் 31 நாடுகள் இந்தத் தர்க்கத்தை ஏற்றன. இது எமது நாட்டுக்குப் பெரும் வெற்றியாகும் - என்றார். (ம-44)

## இத்தாலிக்குப் பீட்சாவென்றால் இலங்கைக்கு கொத்துரொட்டி!

### காப்புரிமம் பெறவேண்டும் என்று சரித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

கொத்துரொட்டிக்கான காப்புரிமையை இலங்கை பெறவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இத்தாலியில் உள்ள பீட்சா மற்றும் அமெரிக்காவின் ஹாம்பர்கர்கள் போன்ற பிறநாடுகளின் பூர்வீக உணவுகளுக்கு நிகரானதாக இலங்கைக்குக் கொத்துரொட்டியை அடையாளமாக மாற்ற வேண்டும். கொத்துரொட்டி மட்டக்களப்பில் இருந்தே தோன்றியது. இலங்கையின் பூர்வீக உணவுகளுக்கான காப்புரிமையைப் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தப்படவேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகளுடனான வர்த்தகத்தை வலுப்படுத்துவதற்கான வழிமுறையாக இதனைப் பயன்படுத்தலாம் - என்றார். (ம)



கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பறக்கமுடியாத நிலையில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட ஆந்தை, நேற்று வன உயிரிகள் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது. (ம-214)

## 9 பெண் தூதுவர்கள் சந்திப்பு

கொழும்பு,மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 9 பெண் தூதுவர்கள் இலங்கையின் உயர்மட்ட பெண் அரச அதிகாரிகளைச் சந்தித்தனர்.

இந்தோனேஷியாவின் தூதுவர் தேவி கஸ்டினா டொபிங் கால் நடத்தப்பட்ட சந்திப்பில், அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங், நோர்வே தூதுவர் ட்ரைன் ஜொரன்லி எஸ்கெடல், நெதர்லாந்து தூதுவர் டான்யா கொங்கிரிப், ஐக்கிய இராச்சியத்தின் தூதுவர் சாரா ஹல்டன், இத்தாலித் தூதுவர் ரீட்டா மனெல்லா, துருக்கித் தூதுவர் ஹோ தி தான் ட்ருக் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் சிம்ரின் சிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் பெண்களை வலுவூட்டுவதற்காகத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கும் ஒத்துழைப்பின் முதல் முயற்சியாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (ஒ-4-இ)

## உக்ரைனில் இருந்து வெளியேற 27 இலங்கையர்கள் மறுப்பு!

கொழும்பு, மார்ச் 10

உக்ரைனில் இருந்து 39 இலங்கையர்கள் வெளியேறியுள்ளனர் எனவும், 27 பேர் தற்போது வெளியேற முடியாது எனத் தெரியப்படுத்தியுள்ளனர் எனவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"உக்ரைனில் உள்ள இலங்கையர்கள் தொடர்பான விவகாரத்தை கையாளும் பொறுப்பு துருக்கியில் உள்ள இலங்கை தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவருடன் கதைத்து, சகல தகவல்களையும் பெற்றுள்ளேன். இலங்கையர்களுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தெரியப்படுத்தியுள்ளேன்.

15 மாணவர்கள் உட்பட உக்ரைனில் 81 இலங்கையர்கள் இருந்தனர். மாணவர்கள்தவிர அங்கு வசித்த 66 இலங்கையர்களில் 39 பேர் உக்ரைனில் இருந்து வெளியேறியுள்ளனர். போலந்து, ருமேனியா, மோல்டோவா ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அதிகளவானோர் ஜேர்மன் சென்றுள்ளனர். அதற்கான அனைத்து வசதிகளையும் எமது தூதரகம் செய்துகொடுத்துள்ளது. தற்போது உக்ரைனில் 27 இலங்கையர்கள்தான் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் தற்போது உக்ரைனில் இருந்து வெளியேற முடியாது என எமக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். சிலர் தொழில்செய்கின்றனர். சிலர் அங்கு திருமணம் முடித்து குடும்பமாக வாழ்கின்றனர்.

அதேவேளை, பெலாரஸ் நாட்டில் உள்ள இலங்கை மாணவர்கள், விரும்பினால் ரஷ்யாவுக்குச் செல்ல முடியும். அந்நாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு தற்போதைய சூழ்நிலையில் எந்தவித அச்சுறுத்தலும் இல்லை' -என்றார். (ம-44)



## தனிமைப்படுத்தப்பட்டவர்கள் நிவாரணத்துக்காக அலைவு

சாவகச்சேரி, மார்ச் 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றால் பீடிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, இதுவரை எந்தவொரு நிவாரணப் பொருள்களும் வழங்கப்படவில்லை. இதனால் தினமும் பிரதேச செயலகத்துக்கு அலைய வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனாவால் தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்குப் பிரதேச செயலகத்தால் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வந்தன. கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவில்லை. பிரதேசத்தில் ஜனவரி மாதத்தில் 66 குடும்பங்களும், பெப்ரவரி மாதத்தில் 203 குடும்பங்களும், மார்ச் மாதத்தில் நேற்று வரை 10 குடும்பங்களுமாக 279 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதுதொடர்பாக பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது, தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்குரிய கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை- என்றனர். (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத இறுதியில் சர்வகட்சி மாநாடு

கொழும்பு, மார்ச் 10

**இம்மாத இறுதியில் சர்வகட்சி மாநாட்டை நடத்துவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் இணக்கம் வெளியிட்டனர் என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.**



சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. பிரதமர் மஹிந்த ராஜபக்ச. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோரும் சந்திப்பில் பங்கேற்றனர்.

இதன்போது சுதந்திரக் கட்சியால் முன்வைக்கப்பட்ட 15 யோசனைகள் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 'நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகள் உள்ளடங்கலாக சர்வக்கட்சி மாநாட்டை நடத்தவேண்டும் என்ற எமது யோசனை ஏற்கப்பட்டது. இதன்படி இந்த மாதஇறுதியில் குறித்த மாநாடு நடைபெறும். நாட்டை மீட்பதற்கான பொதுவான திட்டங்கள் இதன்போது ஆராயப்படும். இதற்கு இணையாக நிபுணர்கள் மாநாடும் நடத்தப்படும். அதில் சர்வமத தலைவர்களும் பங்கேற்பார்கள்- என்றார். (ம-44)

## ஆலயங்களில் பொதியிட்டு அன்னதானம் வழங்க அனுமதி

சாவகச்சேரி,மார்ச் 10

பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு, ஆலயங்களில்பொதியிட்டுஅன்னதானம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச ஆலயங்களின் நிர்வாகத்தினர் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கமைவாக வெளியிடங்களில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக, சமையல் வேலைகளைச் செய்யவேண்டும்.

சமைத்த உணவுகளைப் பொதி செய்து, சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக அடியார்களுக்கு வழங்கலாம்.

முதலாவது பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தில் அன்னதானம் செய்பவர்களின் நடைமுறைகளைப்பொறுத்தே அடுத்த வாரங்களில் அன்னதானம் வழங்குவது தொடர்பாக முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

## எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு இன்றைய தினத்துக்குள் தீர்வு

*அமைச்சரவைப் பேச்சாளர் அழகப்பெரும தெரிவிப்பு*

கொழும்பு. மார்ச் 10

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு இன்று வியாழக் கிழமையுடன் நிரந்தரத் தீர்வுவழங்கப்படும்என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக அன்றாடம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மின்துண்டிப்பால் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கான தீர்வு குறித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்;

எரிபொருள் தட்டுப்பாட்டால் அனல்மின் உற்பத்தி நிலையங்களில் மின்உற்பத்தி முழுமையாக முடங்கிப்போயுள்ளது. மாதாந்தம் எரிபொருள் இறக்குமதிக்காக மாத்திரம் 400 மில்லியன் டொலர் செலவிடப்படுகிறது.

அதாவது நாளாந்தம் 13 மில்லியன் டொலர் எரிபொருள் இறக்குமதிக்காகச் செலவிடப்படுகிறது.

இவ்வாறான செலவுகளைக்குறைக்கும்நோக்கில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் ஊடான மின்உற்பத்தி தொடர்பில் இந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அதிக அவதானம் செலுத்தப்பட்டது.

மேலும் மின்துண்டிப்பின் காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக எம்பிலிபிட்டி மற்றும் சபுகஸ்கந்த மின்உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)



## எரிபொருள் நிலையத்துக்கு மாட்டுவண்டியில் பயணம்

கிளிநொச்சி, மார்ச் 10

எரிபொருள் நிலையத்துக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்ள கரைச்சிப் பிரதேசசபை உறுப்பினர் கொள்கலன்களுடன் மாட்டுவண்டியில் நேற்று சென்றிருந்தார்.

கரைச்சிப் பிரதேசசபை அமர்வுக்குச் செல்ல தனது வாகனத்துக்கு எரிபொருள் இல்லாமையால் எரிபொருளைப் பெறுக்கொள்ள மாட்டுவண்டியில் பயணித்ததாக அவர் தெரிவித்தார். அத்துடன் குறித்த நிலையத்தில் எரிபொருளுக்காக அதிகளவான மக்கள் கூடியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-113)




**ஒரு தாக்கத்துக்கு சமமானதும், எதிரானதுமான மறுதாக்கம் எண்ட ஒண்டிருக்குமெண்டது நியூட்டனின்ர மூண்டாவது விதி. அந்த விதி எல்லாரின்ர வாழ்க்கைக்கும் பொருந்தும். ஆனால் நியூட்டன் அந்த விதியைக் கண்டுபிடிக்கமுதலே நாங்கள் அதைக் கண்டு பிடிச்சு அதுக்கு 'கர்மா' எண்டும் பேர் வைச்சிருக்கிறம். இந்தக் கர்மா இப்ப கனவுக்கார குருப்பை கடுமையாவே ஆட்டிப்படைக்குது.**

**என்னதான் கைச்சின்னத்தில போட்டியிட்டு வெண்டாலும் கூட, கனவுக்கார குருப் தங்கட முதலாளிமாரா மொட்டுக்காரரைத்தான் நம்பியிருந்தது. ஆனால் மொட்டுக்காரர் அப்பிடியில்லை. அவைக்கு என்னதான் வாலை நிக்காமல் ஆட்டினாலும் கூட, பிறத்தி பிறத்திதான். அதோட 2015 இல மஹிந்த பக்கம் தேர்தல் முடியும் மட்டும் நிண்டிட்டு, மைத்திரி வெண்ட உடனேயே படக்கெண்டு அந்தப் பக்கம் கனவுக்கார கும்பல் தாவினதையும் இன்னும் மொட்டுக்காரர் மறக்கேலை. அதாலை ஆளைக் கொஞ்சம் எட்டத்திலேயே வைச்சிருக்கினம். எண்டாலும் அதை சனத்துக்கு காட்டாமல், தாங்கள் தான் எப்பவும் மொட்டுக்காரருக்கு நெருக்கமெண்டமாதிரி சீன் போடுகினம். அப்பிடி சீன் போட்டதோட நிக்காமல், அரசாங்க அலுவலகங்களையும் ஒரு ஆட்டு ஆட்டிவைக்க நினைச்சினம். இப்ப எல்லா ஆட்டத்துக்கும் முடிவு கட்டுற மாதிரி மொட்டுக்காரர், பிரதமரின்ர பிரதிநிதியா ஒருத்தரை ஒருங்கிணைப்புக்குழுவுக்கு நியமிச்சவை.**

**உடனேயே 'அந்தப் பிரதிநிதி ரீ குடிச்சு, வடை சாப்பிட்டு போகலாம். வேற ஒண்டும் கிழிக்க ஏலாது' எண்டு நக்கலடிச்சு, அடுத்த நாள் யாழ்ப்பாணத்துக்கு வந்த நாமலோட ஒட்டிக்கொண்டு திரிஞ்சிட்டு. 'எப்பவும் நாங்கள்தான் மொட்டுக்காரரோட. வேற ஒருத்தரும் ஒண்டும் பிடுங்க ஏலாது' எண்டமாதிரி கனவுக்காரர் நடந்திச்சினம்.**

**ஆனால் இப்ப ஆரை 'வேணுமெண்டால் வந்து ரீ குடிச்சிட்டு போகலாம்' எண்டு நக்கலடிச்சினமோ, அந்தப் பிரதிநிதி தன்ர பவர் என்ன எண்டதைக் காட்ட வெளிக்கிட்டுட்டார். உடனடியா ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களைக் கூட்டச் சொல்லி நேற்றுக் கடிதமும் அனுப்பி இருக்கிறார். இப்ப கச்சேரிப் பெரியவருக்கு பெரிய தர்ம சங்கடம். கடிதத்தை மதிச்சு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களைக் கூட்டினால், கனவுக்கார கும்பல் கோவிக்கும். அதைமாதிரி கடிதத்தில சொன்னமாதிரி கூட்டம் நடத்தாட்டி, பிரதமர் தரப்பு கோபிக்கும். என்ன செய்தாலும் பாதிக்கப்படப் போறது அப்பாவிக் கச்சேரிப் பெரியவர்தான். ஆனாலும்**

**செஞ்சோற்றுக்கடனுக்காக<br>
சேராத இடம் சேர்ந்தால்.<br>
வஞ்சம் வந்து வாட்டத்தான்<br>
செய்யும்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனாவில் மட்டும் விபத்துக்களால் 77 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

**கடந்த வருடம் விபத்துக்குள்ளாகி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 77 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மருத்துவமனைப் பதில் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி நந்தகுமார் தெரிவித்துள்ளார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்ப்பாணம் உட்பட வேறிடங்களிலிருந்தும் விபத்துக்குள்ளாகி, கடந்த வருடம் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 77 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் விபத்து இடம்பெற்ற இடத்தில் உயிரிழந்தவர்களும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தவர்களும் அடங்குவர். இவர்களில் 64 பேர் ஆண்கள்: 13 பேர் பெண்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-125)

## மின்சாரசபை வாடிக்கையாளர் பணியகம் புதிய கட்டடத்தில்

சாவகச்சேரி, மார்ச் 10

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இயங்கி வந்த இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரி வாடிக்கையாளர் பணியகம் அடுத்த வாரம் தொடக்கம் சாவகச்சேரி நகர தேவாலய வீதியில் இயங்கவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரி அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துச் செயற்பட சாவகச்சேரி நகரசபையினர் தனங்களப்பு வீதியில் காணி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-9)

## முதியோர்களின் நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்தவர் கனகராசா

### தவிசாளர் நிரோஷ் இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் முதியோர்களின் நல்வாழ்வு தொடர்பில் அக்கறையுடன் செயற்பட்டவர் முதியோர் சங்கத் தலைவரும், சிரேஷ்ட பிரஜையுமான சுப்பிரமணியம் கனகராசா.

இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

வலிகாமம் கிழக்கில் சிரேஷ்ட பிரஜைகள் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வாழவேண்டும் என தன் உடல் நலனையும் பாராது சிந்தித்துச் செயற்பட்ட ஒரு கல்வியாளர். சிறுப்பிட்டியில் முதியோர் சங்கத்தின் தலைவராக நல்ல பல காரியங்களை நிறைவேற்றியுள்ளார். சிரேஷ்ட பிரஜைகளின் நலவாழ்வு தொடர்பில் சகல அரச திணைக்களங்களுடனும் கடிதத்தொடர்பு வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும் தொடர்புகளைப் பேணியவர். சிறந்த ஆங்கிலப் புலமையும் கல்விப் புலமையும் மிக்க அதிபருமாவார். சிரேஷ்ட பிரஜைகள், ஓய்வூதியர்கள் நாட்டுக்குச் சுமையாகக்கூடாது வளமாக அமைய வேண்டும் என உழைத்த நல்ல மனிதரை இழந்துள்ளோம் -என்றுள்ளது. (ஒ-4-இ)

## வடக்கு- கிழக்குப் பெண்களுக்கு போரால் ஏற்பட்ட துயர் அதிகம்

### ஒப்புக்கொள்கிறார் மஹிந்த

கொழும்பு, மார்ச் 10

இலங்கையில் 30 வருடங்களாக இடம்பெற்ற போரால், வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெண்கள் நாளாந்தம் பெரும் துயரை அனுபவித்தனர்.

போருக்குச் சென்றவர்களின் ஆயிரக்கணக்கான மனைவிகள் விதவைகளாகினர். எல்லைக் கிராமங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் மரண பயத்தில் வாழ்ந்தனர். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; போரால் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். உக்ரைனும் ரஷ்யாவும் மோதிக் கொண்டாலும், அமெரிக்காவும், ஈராக்கும் மோதிக் கொண்டாலும் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே.

இலங்கையில் 30 வருடங்களாக துன்பங்களை அனுபவித்த பெண்கள் போர் முடிவடைந்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

ஈஸ்டர் தாக்குதலின் மூலம், நம் நாட்டுப் பெண்களுக்கு மீண்டும் அச்சம் ஏற்பட்டது.

எனினும் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் இன்று மிகவும் கடினமான சூழ்நிலையில் இருக்கின்றோம். நம் நாட்டில் மின்சாரம், டீசல், எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும்போது பெண்கள் பாதிக்கப்படுவது நமக்குத் தெரியும் -என்றார். (ஒ-4-இ)

## போதைப்பொருளுடன் இளைஞன் கைது

சாவகச்சேரி, மார்ச் 10

சாவகச்சேரி பொதுச்சந்தையில் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டான் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞனை பொலிஸார் சோதனையிட்டபோது அவரிடமிருந்து 20 கிராம் போதைப்பவுடர் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-9)



## வடக்குக்கு சோலர் சக்தி மூலம் தடையற்ற மின்சாரம்

### ஆளுநர் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 10

சோலர் சக்தி மூலம் பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தி வடக்கு மாகாணத்தின் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தடையின்றி முன்னெடுக்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டின் பொது இடங்களில் மின்சாரப் பயன்பாட்டை 20 வீதமாகக் குறைக்குமாறு நிதி அமைச்சரால் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மின்சாரப் பயன்பாட்டை சிக்கனமாக்குவதற்கு வடக்கு மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் பொருத்தப்பட்டுள்ள சோலர் தொகுதிமூலம் மின்சாரத்தைப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வடமாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க சக்திமூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றார். (ஒ-14-20)

## சர்வதேச கபடிப்போட்டியில் யாழில் ஒருவர் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 10

பங்களாதேஷில் நடைபெறவுள்ள சர்வதேச கபடிப்போட்டியில் யாழ்.சிறைச்சாலை அலுவலர் ஆர்.பென்சி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆடவர் கபடிப்போட்டியிலேயே குறித்த அலுவலர் கலந்துகொள்ளவுள்ளார்.

அலுவலருக்கான விமானப் பயணச்சீட்டு, உணவு, தங்குமிடம் மற்றும் உள்ளகப் போக்குவரத்து உள்ளடங்கலாக உரிய வசதிகளை பங்களாதேஷ் வழங்கியுள்ளது.

சர்வதேச கபடிப் போட்டியை சர்வதேச கபடிச் சம்மேளனம் மற்றும் ஆசிய கபடிச் சம்மேளனத்தின் அனுசரணையில் "தி பங்களாதேஷ் கபடிக் கூட்டமைப்பு நடத்துகின்றது. (ஒ-14-27)

## சிறுமி கர்ப்பம் தாயின் இரண்டாவது கணவர் கைது

வவுனியா, மார்ச் 10

17 வயது பெண் ஒருவர் கர்ப்பம் தரித்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகத்தில் அவரது தாயின் இரண்டாவது கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது. கணவனைப் பிரிந்த பெண் ஒருவர் இரண்டு பிள்ளைகளுடன், வேறு ஒருவரைத் திருமணம் செய்திருந்தார். அவர் வேலை வாய்ப்புக்காக மத்திய கிழக்கு நாட்டுக்குச் சென்றுள்ளார். இரு பிள்ளைகளும் சிறிய தந்தையாருடன் தங்கியிருந்தனர். 17 வயதுச் சிறுமி உடல் நிலை சுகவீனமுற்ற நிலையில் பூவரசன்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, அவர் கர்ப்பம் தரித்திருந்தமை தெரிய வந்தது. இதனையடுத்து தாயின் இரண்டாவது கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும்

## அமைச்சர் ஆலோசனை



**கொழும்பு,மார்ச் 10**

**உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள பின்னணியில், தேசியமட்டத்தில் எரிபொருளின் விலையை அதிகரிப்பது குறித்து அவதானம் செலுத்துமாறு வலுசக்தி அமைச்சர் காமினி லொகுகே ஆலோசனை தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்: மின்னுற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளை நேரடியாகப் பெற்றுக்கொள்ள இலங்கை மின்சாரசபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

டீசல்,பெற்றோல் மற்றும் உராய்வு எண்ணெய் இறக்குமதிக்குத் தேவையான டொலர் முழுமையாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடி நிலைமைக்கு இன்றுடன் தீர்வு கிடைக்கப்பெறும்.

எரிபொருள் பற்றாக்குறை தோற்றம்பெறும் என்ற அச்சத்தின் காரணமாகவே, மக்கள் வழமைக்கு மாறாக எரிபொருளைப் பெற்றுக் கொள்ள வரிசையில் நிற்கின்றனர். எரிபொருள் விலையேற்றம் குறித்து இதுவரையில் எந்தவிதத் தீர்மானங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

மின்னுற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் முழுமையாக விநியோகிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் நாள்களில் மின் விநியோகத் தடை குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும்-என்றார். (ஒ-4-இ)



## அரச அதிகாரிகளுக்கான விசேட எரிபொருள் நிறுத்தம்

கொழும்பு.மார்ச் 10

அரச அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவைத் தற்காலிகமாக நிறுத்துவது தொடர்பான சுற்றறிக்கை பொதுநிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக அமைச்சின் செயலாளர்கள் உட்பட அரச அதிகாரிகளுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 225 லீற்றருக்கு மேலதிகமாக, விசேட கடமைகளுக்காக வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுச்சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பொது நிர்வாக அமைச்சின் செயலர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைவாக, தற்காலிகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் தொலைதூரப் பிரதேசங்களுக்கான கலந்துரையாடல்களை சூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்தவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## அமைச்சர்களின் அடிமைகளாக சில பிக்குகள்

கொழும்பு,மார்ச் 10

சில பிக்குகள் அமைச்சர்களின் அடிமைகளாக மாறியுள்ளனர் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசனத்துக்கு ஏற்பட்டுள்ள அழிவுக்கு சில மகாநாயக்க தேரர்களும் பொறுப்புச் சொல்லவேண்டும்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள பௌத்த மத ஆலோசனைச் சபை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

இந்த ஆலோசனைச் சபையால் பௌத்த மதத்துக்கு எந்தவொரு சேவையும் ஆற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஒ-4-இ)

# பஸில் ராஜபக்சவால்தான் அழிவுப் பாதையில் நாடு!

## விமல், கம்மன்பில ஆவேசம்

கொழும்பு, மார்ச் 10

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை குறித்த உண்மைகளை மக்களுக்கு தெரிவித்தமைதான் பிரச்சினைகளுக்குக் காரணம் என பிரதமரோ அல்லது வேறு எவருமோ கூறுவார்களாயின் அவர்கள் முட்டாள்தனமான கருத்தாளர்களே. நாட்டின் இந்த நிலைமைக்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவே காரணம் என முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்ததாவது:-



நாட்டின் பொருளாதார நெருக்கடி, குறிப்பாக வெளிநாட்டுக் கையிருப்பு நெருக்கடியும் அதன் மூலமாக ஏற்பட்டுள்ள ஏனைய மோசமான தாக்கங்கள் குறித்தே நாட்டு மக்களுக்குத் தெரிவித்தோம். ஒருவேளை எம்மை நீக்கிவிட்டு வெளிநாட்டு கையிருப்பைப் பெற்றுக்கொள்ள முடியும், நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணமுடியும் என அரசாங்கம் நினைத்திருக்கமுடியும். அதனால்தான் எம்மை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கினார்களோ தெரியவில்லை.

சூழ்ச்சி தெரிந்தும், அதனைக் கண்டு கொள்ளாது அல்லது தெரிந்தும் தெரியாததைப்போல் இருக்க எம்மால்முடியாது. அதனால்தான் இந்த உண்மைகளை நாட்டுக்குக் கூறினோம்.

அதன் பிரதிபலன் எம்மை பதவியில் இருந்து நீக்குவது என்றால் அதனை ஏற்றுக்கொள்ளவும் நாம் தயாராக உள்ளோம்- என்றார். (ம)

## அத்தியாவசியமற்ற

# பொருள்கள் இறக்குமதி கட்டுப்படுத்த அனுமதி

கொழும்பு,மார்ச் 10

இலங்கைக்கு அத்தியாவசியமற்ற 600 பொருள்களை இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தும் விதிமுறைகள் அடங்கிய அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்நியச் செலாவணி வெளியேறுவதைத் தவிர்த்து இறக்குமதியை கட்டுப்படுத்த நிதியமைச்சும், இலங்கை மத்திய வங்கியும் இணைந்து அத்தியாவசியமற்ற பொருள்களின் பட்டியலைத் தயாரித்துள்ளன. இவற்றைத் தடை செய்வதற்குப் பதிலாக, 3 நிபந்தனைகளின்கீழ் இறக்குமதி செய்ய அனுமதி வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அதற்கமைய, குறிப்பிட்ட சில பொருள்களை இறக்குமதி செய்வதற்கு விசேட உரிமம் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் மேலும் பல பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி வீதங்கள் அதிகரிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான விசேட வர்த்தமானி அறிவிப்பை நிதியமைச்சகம் விரைவில் வெளியிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-4-இ)



இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை அண்மையில் சந்தித்தார். இருநாட்டு நாடாளுமன்றங்களுக்கிடையிலான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர். கொரோனாச் சூழலில் சீனஅரசு, இலங்கைக்கு வழங்கும் பல்வேறு உதவிகளுக்கும் சபாநாயகர் நன்றி தெரிவித்தார். (ஒ-4-இ)

# சவேந்திரவுக்கு தடை விதிக்குக

## பிரிட்டன் அரசாங்கத்துக்கு அழுத்தம்

கொழும்பு, மார்ச் 10

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்காவைப் பின்பற்றி பிரிட்டன் அரசாங்கமும் தடை விதிக்கவேண்டும் என்று அந்த [illegible] யுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை இராணுவத்தின் கட்டளைத்தளபதிகளில் ஒருவரான ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராகத் தடைவிதிக்குமாறு பிரிட்டன் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றேன். இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டவர் என்று அவர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றார். சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக அமெரிக்கா ஏற்கனவே பயணத்தடை விதித்திருக்கும் நிலையில், அதனைப் பிரிட்டன் பின்பற்ற வேண்டும். இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதில் தாம் கொண்டிருக்கும் கடப்பாட்டை நிரூபிப்பதற்கு ஏற்றவாறான நடவடிக்கைகளை பிரிட்டன் அரசாங்கம் முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும்" - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்கதினமானது மகளிர்தினம்

## முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம்




முல்லைத்தீவு, மார்ச் 10

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களின் தொடர் போராட்டம் 5 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு, மகளிர் தினத்தை துக்கநாளாகக் கடைப்பிடித்து நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. புனித இராயப்பர் ஆலய முன்றிலில் ஆரம்பமான ஊர்வலம், முல்லைத்தீவு பிரதான சுற்றுவட்டப் பாதைவரை இடம்பெற்றது. தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளிலான பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-4,246)

# காணிப்பிணக்கால் கைகலப்பு நால்வர் காயம்; மூவர் கைது!

முல்லைத்தீவு, மார்ச் 10

குடும்ப உறவினர்கள் இரு பகுதியினருக்கு இடையில் நீண்டகாலம் ஏற்பட்ட காணிப்பிணக்கு கைகலப்பாக மாறியது. அதில் நால்வர் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் மூன்று பேரைக் கைது செய்துள்ளனர். (ம-4-19)



# யாழ்.மாநகர அபிருத்தி ஒன்றுபட்டால் முடியும்

## பிரதி முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ்ப்பாணம் மாநகரத்தின் அபிவிருத்தி கட்சி பேதங்களின்றி முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே நிறைவடையும்.

இல்லையெனில் மாநகர சபையின் ஆயுள்காலம் இன்னும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தாலும்கூட சாத்தியப்படாது என்று யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

வடிகாலமைப்பை மறுசீரமைக்கும் அங்குராப்பண நிகழ்வு, நாயன்மார்கட்டு செவிப்புல பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

உறுப்பினர்களால் செய்யப்படும் வேலைகளை, குழப்பும் சிலர் உள்ளனர். இது அரசியல் நாகரிகம் அற்ற செயல். கட்சிபேதங்களைக் கடந்து, ஒன்றுசேர்ந்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அனைத்து வட்டங்களிலும் இணைந்து பணியாற்றவேண்டும். அப்படியானால் அபிவிருத்திகளை விரைவாக முழுமைப்படுத்த முடியும்-என்றார்.

மாநகரசபை உறுப்பினர் திருமதி மதிவதனி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ்.மாநகர சபையின் உறுப்பினர்களாகிய தர்சானந்தன், நளிந்தா மற்றும் கிராம மக்கள் கலந்துகொண்டனர். (ஒ-4-27)

# ஆயுள்வேத மருந்தகங்களில் ஆங்கில மருந்துகள்

## மக்கள் விசனம்

சாவகச்சேரி மார்ச் 10

தென்மராட்சி பிரதேசத்தில் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் பலர் தமது பகுதியிலுள்ள ஆயுள்வேத மருந்தகங்களில் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் சிகிச்சை பெறச் செல்வோருக்கு ஆங்கில மருந்துகள் வழங்கப்படுகின்றன என்றும் அந்தப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுள்வேத மருந்தகங்களில் ஆங்கில மருந்துகள் நோயாளர்களுக்கு வழங்கப்படுவது தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், ஆயுள்வேத மருத்துவர்கள் அவற்றைப் பயன்படுத்துவது சுகாதாரப் பகுதியினரின் திடீர்ப் பரிசோதனையில் அண்மைக்காலமை பிடிக்கப்பட்டு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

பிரதேசத்தில் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் ஆயுள்வேத மருந்தகங்களுக்குச் செல்லாமல் அருகில் உள்ள அரச மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை செய்துகொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ய-9)

# பயனற்ற பேருந்துக் கட்டம் பயணிகளோ பெரும் சிரமம்

சாவகச்சேரி,மார்ச் 10

திட்டமிடப்படாது, பொருத்தமற்றமுறையில் அமைக்கப்பட்டுள்ள பேருந்துக் கட்டத்தால் பயணிகளுக்கு எந்தவித நன்மையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பேருந்து நிலையம் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட போதிலும், கட்டடத்தில் பயணிகள் குடைபிடித்துக் கொண்டு நிற்கவேண்டியுள்ளது.

கட்டடம் உயரமாக அமைக்கப்பட்டதால் மழை காலங்களில் தூவானம் வீசுவதுடன், வெயில் காலங்களிலும் குடைபிடித்துக் கொண்டே ஒதுங்கி நிற்கவேண்டியுள்ளது.

பயணிகள் மற்றும் தனியார் பேருந்துச் சங்கத்தினர் உள்ளிட்டோர் சாவகச்சேரி நகரசபைக்கு முறையிட்டபோதிலும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)



# பசுமை அறிவொளியின் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 10

பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பால் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கனடா ரொறன்ரோவின் மனிதநேயக் குரலின் தலைவர் ஆர்.என். லோகேந்திரலிங்கம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பா.பாலகணேசன், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மு.கனகலிங்கம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-14)

# வரவேற்பு வளைவுகள் நகரசபை அனுமதி

சாவகச்சேரி மார்ச் 10

கடந்தவருட நிதிஒதுக்கத்தில் முதற் கட்டமாக ஏ-9 வீதியில் உள்ள நுணாவில் மற்றும் மீசாலை ஆகிய இடங்களில் வரவேற்பு வளைவுகள் அமைக்க சாவகச்சேரி நகரசபை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோவில் வீதி, கோயிற்குடியிருப்பு, புனித லிகோரியார் கோவில் வீதி, மீசாலை கிழக்குப் பாலையடி விநாயகர் முதலாம் ஒழுங்கை, சாவகச்சேரி நகர சண்முகம் வீதி இடது பக்க ஒழுங்கை, சங்கத்தானை பெருங்குளம்வீதி, வைரவர் கோவில் இரண்டாம் ஒழுங்கை, மீசாலை மேற்கு முதலியாவெளி ஒழுங்கை, நுணாவில் மேற்கு வேதாந்தமடம் இரண்டாம் ஒழுங்கை, கோயிற்குடியிருப்பு வித்தகம் வீதி போன்றவற்றுக்கான வரவேற்பு வளைவுகளே அமைக்கப்படவுள்ளன. (ய-9)

# பயிர்ச்செய்கை கலந்துரையாடல்

கிளிநொச்சி, மார்ச் 10

கல்மடுக்குளம் சிறுபோகப் பயிர்ச்செய்கைக் கலந்துரையாடல், கண்டாவளை கமநலசேவை நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

கல்மடுக்குளத்தின்கீழ் 60 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கைக்கும் உணவுப் பயிர்ச்செய்கைக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுமாயின் பயிர்கள் அழிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், கால்நடை மருத்துவர், கண்டாவளை பிரதேச செயலர், அலுவலர்கள், கமக்கார அமைப்புக்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-14,113)

# மருத்துவமனை விடுதிக்குள் பாம்புகளின் நடமாட்டம்

## நோயாளிகள் அச்சம்

சாவகச்சேரி, மார்ச் 10

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை விடுதிக்குள் தினமும் இரவு வேளையில் பாம்புகள் நடமாடுகின்றன. இதனால் விடுதியில் தங்கியுள்ள நோயாளர்கள் மற்றும் உதவியாளர்கள் அச்சத்துடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். மருத்துவமனை வளாகத்தில் விடுதிகளைச் சுற்றிப் பெருமளவு புற்கள் காணப்படுகின்றன. இவை துப்புரவு செய்யப்படாத நிலையில் [illegible] கின்றன. அத்துடன் விடுதியில் இரவு வேளையில் நுளம்புகளின் தாக்கம் அதிகமாக உள்ளதென்றும் நோயாளர்கள் தெரிவித்தனர். (ஒ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளொரு நல்வார்த்தை

கடின உழைப்பு கதவுகளைத் திறந்து இந்த உலகத்தை நமக்கு காட்டுகின்றது. -றொபின் சர்மா

## சொற்களில் வாழ்தலா பெண்ணியம்?

உலகெங்கிலும் பெண்கள் தினம் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது. கொண்டாடப்பட்டிருக்கின்றது என்ற சொல்லாடல் இங்கு தெரிந்தே தவிர்க்கப்பட்டுள்ளது. பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், கவனவீர்ப்புகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் எவ்வாறு கொண்டாட்டங்களாக அமையும்? கொண்டாட்டம் என்ற சொல்லாடலுக்கு முற்றிலும் முரணானவை அவை. ஆதலால், 'பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது' என்பதைவிட 'பெண்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டது' என்பதுதான் இங்கு கச்சிதப்பொருத்தம்.

இதில், ஆச்சரியப்படும் விடயம் என்னவென்றால் இலங்கையில் மட்டுமல்ல உலகின் அத்தனை நாடுகளிலும் இந்த ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்றிருக்கின்றன. தன்னை ஆகப்பெரும் முற்போக்குச் சித்தாந்தம்கொண்ட நாடு என்று வெளிப்படுத்தும் அமெரிக்காவில்கூட பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும்தான் இடம்பெறுகின்றனவே தவிர, கொண்டாட்டங்கள் இடம்பெறுவதேயில்லை. ஆக, பெண்ணடிமைத்தனம் என்பது இல்லாத நாடென்ற ஒன்று இல்லை. எவ்வளவு பாரதூரமான விடயமிது.

'இதுவரையான நாள்களில் உன்னை நான் அப்படி நடத்தியிருக்கின்றேனா?', 'இத்தனை காலத்தில் ஒரு தடைவையாவது ஏதாவது விடயத்துக்காக உன்னைத் தடைபோட்டிருக்கின்றேனா?' என்ற கேள்விகளை அவ்வளவு இலகுவாக உதிர்த்துவிடக்கூடியவர்களாக நாமிருக்கின்றோம். இதன் அர்த்தம் என்ன? இந்தக் கேள்விகளின் வெளிப்பாடுதானென்ன? 'பார் எவ்வளவு தூரம் மற்றவள்களில் இருந்து உன்னை விலக்காக நடத்தியிருக்கின்றேன். மற்றவர்களில் இருந்து எவ்வளவு தூரம் நான் வேறுபாட்டுடன் நடந்திருக்கின்றேன்' என்ற ஒருசுயதம்பட்ட மற்றும் ஆதங்க ஆதிக்க மனோநிலைதான் இது. இதுகூட பெண்ணடிமைத்தனம் ஊறிப்போன ஒரு சராசரி மனநிலைதான். அளவுகோல்கள் வேறுபடுகின்றன. அவ்வளவே!.

சாதிமறுப்பு என்பது, 'நான் சாதியை மறுக்கின்றேன், நான் சாதியை மறுக்கின்றேன்' என்று பிதற்றிக் கொள்வதல்ல. அதைப் பேசுபொருள் ஆக்காமல் இருப்பதே. எழுத்தற்ற வெற்றுக்காகிதம் போன்ற மனநிலையுடன் அதை அணுகுவதே. அதுபோல்தான் இதுவும். பெண்ணியம் என்பது, 'நான் பெண்களை மதிக்கின்றேன்', 'நான் பெண்களுக்கு உரிமைகளை வழங்குகின்றேன்' என்ற தம்பட்டத்தின் வெளிப்பாடல்ல. பெண்ணுக்கான சுதந்திரத்தை நான் வழங்குகின்றேன் என்றால் அதன் மூலம் மறைமுகமாக எழும் கேள்வி யாதெனில், அவள் சுதந்திரத்தை வரையறுக்கும், வழங்கும், எடுக்கும், மட்டுப்படுத்தும், தடைபோடும் அதிகாரத்தை உனக்கு யார் தந்தது என்பதே? எனினும் எது பெண்ணியம்?. ஓர் உயிராக, உணர்வானவளாக அவளை அணுகு என்பதன் 'உச்சபட்ச செயல்வடிவத்தின்' வெளிப்பாடுதான் பெண்ணியம்.

இவ்வாறிருக்கையில், எமது சமூகத்தில் இடம்பெறும் வன்செயல்கள், வன்புணர்வுகள், சிறுமிகள் மீதான துர்நடத்தைகள், உளவியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் ஏற்படுத்தப்படும் காயங்கள் என்பன எந்த வகைக்குள் வரும் என்று நீங்களே புரிந்துகொள்ளுங்கள். அதை விலாவாரியாக எழுதித்தான் புரிய வைக்கவேண்டுமென்றல்ல. குறைந்தபட்ச புரிதல் இருந்தாலே, இன்று தமிழர் தாயகத்தில் இடம்பெறும் உச்சபட்ச பெண்ணடிமைத்தனத்தை உணர்ந்துகொள்ளலாம்.

மகளிர் தினம் என்றால் சமூக வலைத்தளங்களில் தனியே வாழ்த்துக்களையும், 'சிங்கப்பெண்ணே' போன்ற சில்லறைகளை சிதறவிடுதலும் போதுமானது என்றுதான் பலரும் எண்ணுகின்றார்கள். 'பெண்மை' தொடர்பான குறைந்தபட்சப் புரிதலே இல்லாத தேசத்தில் இது தவிர்க்கமுடியாத சிந்தனை. கொஞ்சம் இயல்பாக அணுகுங்கள். சொற்களை விடவும் பெண்மையை மதியுங்கள். ஒரு நாளென்று இல்லாமல் ஒவ்வொரு நாளுமே மகளிர் தினமாக மாறட்டும்...!




# தமிழர் உரிமைகளை வென்றெடுக்க அமெரிக்கா முழுமையாக உதவும்!

## கூட்டமைப்பிடம் அமெ. தூதுவர் உறுதி

**தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெற்றிகொள்வதில் அமெரிக்காவின் முழுமையான ஒத்துழைப்பும் உதவிகளும் கிடைக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பின்போது, அரசியல் தீர்வு விடயங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மீண்டும் அமெரிக்கா அங்கம் பெற்றுள்ள நிலையில் அதன் மூலமாக முன்னெடுக்கக்கூடிய விடயங்கள், அரசமைப்பு உருவாக்கம் ஆகிய விடயங்கள் குறித்தே முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ம)

# யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா இரண்டாவது நாளுக்கான திரையிடல்!

யாழ்ப்பாணம் சர்வதேசத் திரைப்படவிழாவின் இரண்டாம் நாளான இன்றும் சில திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.
முற்பகல் 10 மணிக்கு அபிலாஷ் ஷெட்டியின் 'கோலி தால்' காட்சிப்படுத்தப்படும் பேரனின் இரவு விருந்துக்காக அடைக்கப்பட்டிருந்த கோழி காணாமற்போகின்றது. அந்தக் கோழி எங்கு சென்றது அல்லது யாரால் திருடப்பட்டிருக்கலாம் என்பதை எவ்வாறு அறிகின்றார்கள் என்பதை இந்தத் திரைப்படம் கருப்பொருளாகக் கொண்டது. தாத்தா, பாட்டி மற்றும் பேர னுக்கும் இடையிலான அன்பு, கவனிப்பு, பாசம், பேராசை, மூடநம்பிக்கை என்பவற்றை நகைச்சுவையுடன் வெளிப்படுத்துவதாகக் கதை நகர்ந்து செல்கின்றது. பிற்பகல் 1.15 மணிக்கு சுசாந்த் மிஸ்ரா இயக்கிய 'ஜோசப் போர்ன் இன் கிரேஸ்' எனும் இந்தியத் திரைப்படமானது உமாகந்தா மகாத்ராவினால் எழுதப்பட்ட 'ஜோசப்' எனும் சிறுகதையின் தழுவலாகும். சிறுவயதிலே அநாதைக் குழந்தையாகத் தத்தெடுக்கப்பட்டு வளரும் ஜோசப் தனது பள்ளிப் படிப்பு, தொழில் பயிற்சிக்காக ரேடாடூனுக்கு அனுப்பப்படுகின்றான். இந்தக் காலப்பகுதியில் அவருடைய கடந்தகால நினைவுகள், புதிய தேடல்கள், கடமைகள், புதிதாக அறிமுகமாகும் நபர்களுடனான தொடர்புகள் மற்றும் அவர்களின் நண்பர்கள் என அவர் கடந்துவந்த வித்தியாசமான வாழ்க்கைப் பயண அனுபவத்தை இந்தத் திரைப்படம் பேசுகின்றது.
மாலை 4.45 மணிக்கு பங்களாதேஷ் இயக்குநரான முகமது றபி மிர்தாவின் இயக்கத்தில் உருவான 'நோ கிறவுன்ட் பெனத்த பீற்' எனும் அறிமுகத் திரைப்படம் திரையிடப்படும். நண்பகல் 12 மற்றும் பி.ப. 3.30 மணிக்கு விருதுக்காகப் போட்டியிடும் இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஆர்மேனியா - பிரான்ஸ் நாடுகளின் குறுந்திரைப் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இந்தக் காட்சிகள் அனைத்தும் இலவசமாகும். (ம)

நாளை 11.03.2022 வெள்ளிக்கிழமை மாசி 27

சுபநேரம் : 06.23 - 07.53
ராகுகாலம்: 10.53 - 12.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எரிபொருள் நிலையத்தில் பொதுமக்கள் நீண்டவரிசை

சாவகச்சேரி, மார்ச் 10
கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் பெறுவதற்காக நேற்று நீண்டவரிசையில் பொது மக்கள் வாகனங்களுடன் நின்றனர்.
எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு டீசல் வருகிறது என்ற தகவல் கிடைத்ததை அடுத்து பொதுமக்கள் இவ்வாறு வாகனங்களுடன் நீண்டவரிசையில் நின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-159)

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 08 . 1943



மறைவு 08 . 03 . 2022

**கார்த்திகேசு அம்பிகாபதி (சின்னத்தம்பி-பிரபல வர்த்தகர்)**

சரவணை கிழக்கு வேலணையைப்பிறப்பிடமாகவும் வவுனியா குட்செட் வீதி, தோணிக்கல்லை வதிவிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் கார்த்திகேசு அம்பிகாபதி (சின்னத்தம்பி) அவர்கள் 08.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார் .
அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு முத்துப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னம்மாவின் அன்பு மருமகனும் தயாநிதியின் ஆருயிர் கணவரும் கலைச்செல்வம் ( சிவா - சுவிஸ் ) கிருபாகரன் ( உதயா - பிரான்ஸ் ) பிரபாகரன் ( பிரபா - பிரான்ஸ் ) சசிகலா ( சுவிஸ் ) மகிந்தகலா ( பிரான்ஸ் ) மதிகரன் ( மதி ) காயத்திரி ( வவுனியா ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சினி , அமுதினி, கீர்த்தி, தயாபரன், அனுராஜ், கஸ்தூரி, பிரசன்னா, ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, முத்துலிங்கம் மற்றும் பாலசுப்பிரமணியம், கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் ( பிரபல வர்த்தகர் - நீர்கொழும்பு ) அவர்களின் மைத்துனரும் சரன், யஸ்னவி, டினுஜன், ஹரிசன், றொஜினா, கோபிகா, சாதகன், அர்ச்சுதன், வர்சினி, யக்சனா, வக்சா, பானுஜன், அக்ஷனா, சாய்சரன், ஹரிசரன், ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
0778214659

CS 0097916



## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 10
மக்கள் திட்ட ஒன்றியத்தால் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எவ்வாறு கையாள்வது மற்றும் மாகாணங்களில் இடம்பெற்று வரும் நிலஅபகரிப்பு ஆகியவை தொடர்பிலான கலந்துரையாடல் வவுனியா எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.
நாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடி, நிலஅபகரிப்புக்கள் மற்றும் மாணவர்களிடையே அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை, அவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் நடவடிக்கைகள் என்பன தொடர்பில் இதன்போது மாவட்ட அமைப்பாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது.
இதில் மக்கள் திட்ட ஒன்றியத்தின் மாகாண இணைப்பாளர் ந.தேவகிருஷ்ணன் , மாகாண செயலாளர், அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)

## கஞ்சா பறிமுதல்: ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,மார்ச் 10
ஊர்காவற்றுறையில் 2ஆயிரம் மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து சந்தேகநபரை கைதுசெய்தனர்.
மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் . (ஒ-4-27)

# எரிவாயு இன்மையால் உணவகங்கள் பூட்டு

**மன்னார்,மார்ச் 10**
**மன்னார் மாவட்டத்தில் நிலவிவருகின்ற எரிவாயுத் தட்டுப்பாட்டால், அநேகமான உணவகங்கள் மூடப்பட்டுள்ளன.**
அதேவேளை வீடுகளில் எரிவாயுவைப் பயன்படுத்தும் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அதேவேளை தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் இன்மையால் வாகன உரிமையாளர்கள் பரல்கள் மற்றும் கான்களுடன் எரிபொருள் நிலையங்களில் காத்திருக்கின்றனர்.
எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரச வாகனங்கள் மற்றும் முப்படையினருக்கு மாத்திரமே டீசல் விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-213)

## உள்ளூர் துப்பாக்கி மீட்பு

கிளிநொச்சி,மார்ச் 10
கிளிநொச்சி- பெரியகுளம் பகுதியில் உள்ளூர்த் துப்பாக்கி ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.
இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, மீட்கப்பட்ட துப்பாக்கி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-4-113)



## இந்து மயானத்தில் புனரமைப்புப் பணி

யாழ்ப்பாணம், மார்ச் 10
பொன்னாலை இந்து மயானத்தின் முதலாம் கட்டப் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
மயானம் சேதமடைந்தமையால் மழைகாலங்களில் உடல்களை எரிப்பதற்கு பல சிரமங்களை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.
இதுதொடர்பாக பிரதேசசபை உறுப்பினர் ம.பொன்ராசாவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.
அதற்கமைவாக பிரதேசசபை உறுப்பினரின் ஏற்பாட்டில், காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த அமரர் கணேசமூர்த்தி இராஜேஸ்வரியின் நினைவாக புலம்பெயர் நாட்டிலுள்ள அவரது உறவினரின் நிதிப்பங்களிப்பில் குறித்த மயானத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ஒ-14-125)

## பல்கலை மாணவிக்கு இரண்டு இலட்சம் ரூபா

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ்ப்பாணம், பெருமாள்கோவில் உறவினர் ஒன்றியத்தால் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவிக்கு 2 லட்சம் ரூபா காசோலை நேற்று வழங்கப்பட்டது.
மாணவிக்கான காசோலையை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் வழங்கினார். (ஒ-14-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேட்டோவில் இணையோம்!

## அடி பணிந்தது உக்ரைன்

## புடினுடன் பேசவும் விருப்பம்

கீவ், மார்ச் 10

**நேட்டோவில் உக்ரைனை இணைக்கும் முயற்சிகள் புதிதாக முன்னெடுக்கப்படாது என்று தெரிவித்துள்ள உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி, ரஷ்யாவுடன் நிரந்தரப் போர் நிறுத்தத்தை விரும்புகின்றோம் என்று அறிவித்துள்ளார். அத்துடன் ரஷ்ய அதிபர் புடினுடன் நேரடியாகப் பேசுவதற்கு அவர் விருப்பமும் வெளியிட்டுள்ளார்.**



ரஷ்யா மற்றும் உக்ரைன் வெளிவிவகார அமைச்சர்கள் துருக்கியில் இன்று சந்தித்துப் பேசவுள்ள நிலையில் இந்த அறிவிப்பை ஷெலன்ஸ்கி விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள காணொலியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ரஷ்யப் படைகள் உக்ரைனின் தலைநகர் கீவை நெருங்கி வருகின்றன.

இதனால் நாம் அச்சம் கொள்ளவில்லை. நான் இன்னும் தலைநகர் கீவில் உள்ள எனது அலுவலகத்தில்தான் இருக்கின்றேன். பயந்து ஓடவில்லை. எனது நாட்டைப் பாதுகாக்க இயன்ற வரை நான் பாடுபடுவேன், போரிடுவேன். உக்ரைனை அங்கீகரிப்பதற்கும் இணைப்பதற்கும் நேட்டோ ஆர்வம் காட்டவில்லை. நேட்டோவில் இணைவதற்காக எந்த மேலதிக கோரிக்கையையும் நாம் விடுக்கப் போவதில்லை. உக்ரைனில் நிரந்தரப் போர்நிறுத்தத்தை மேற்கொள்ளவே நாம் விரும்புகின்றோம். புடினுடன் நேரடியாகப் பேசுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

உக்ரைனில் 'வான் பறப்புத் தடை வலயம்' அறிவிக்க வேண்டும்என்று ஷெலன்ஸ்கி விடுத்த கோரிக்கையை நேட்டோ திட்டவட்டமாக மறுத்ததை அடுத்து, நேட்டோவை ஷெலன்ஸ்கி வசைபாடினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணம் வந்தாலும் சேமிக்கவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உங்கள் மீது வீண்பழி ஏற்படாமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். பயணம் செல்ல நேரிடலாம். முயற்சியில் வெற்றி உண்டு.

**இடபம்:** பிறருக்கு உதவி செய்வதால் உங்களுக்கு நல்லபெயர் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் முயற்சி மூலம் லாபம் கிடைக்கும். பிறரது பொருளைக் கையாளுவதில் கவனமாக இருங்கள்.

**மிதுனம் :** மனவருத்தம் நீங்கி மகிழ்ச்சியும், நிம்மதியும் கிடைக்கும். உங்களைப் பகைத்துக் கொள்ள நினைப்பவர்கள் மனம் மாறுவார்கள். வாக்கை நிறைவேற்றுவர்.

**கடகம்:** வேலைச்சுமை குறையும். நிம்மதிக்கான சூழல் நிலவும். எந்தச் செயலையும் முனைப்புடன் செய்யும் சிரத்தை வளரும். சிலவிஷயங்களை அவசரமாக முடிக்கவேண்டிவரும்.

**சிம்மம்:** நிதானத்தைக் கடைபிடிப்பீர்கள். வேற்று மதத்தவர் நன்மை செய்வர். எதிர்பாலினத்தவர் அளிக்கும் உதவி வெற்றிக்கு வழிவகுக்கும். தாமதத்தைக் குறைத்துப் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** நீங்கள் புகழ் அடைவீர்கள். பணிவாக நடந்து பிறரை வியப்பூட்டுவீர்கள். உங்களுக்கு உதவி செய்ய தயங்கியவர்கள் உங்கள் உதவியை நாடிவருவர்.

**துலாம்:** நண்பர்களுக்காக மத்தியஸ்தத்தில் ஈடுபடவேண்டாம். குழப்பத்துக்கு தீர்வு காண அனுபவமிக்கவரின் உதவி கிடைக்கும். பயம், குழப்பம் நீங்கும் படியான ஆறுதல் வார்த்தை கிடைக்கும்.

**விருச்சிகம்:** சமூகத்தில் நல்ல விஷயங்கள் செய்து நற்பெயர் எடுப்பீர்கள். உயர்பதவியில் இருப்பவர்களின் கருணை உங்களுக்குக் கிடைக்கும். பணியிலுள்ள ஈடுபாட்டால் முன்னேற்றம் அடைவீர்கள்.

**தனுசு:** பெற்றோர் விரும்பிய சாதனைகளைச் செய்வீர்கள். உடல் நலம் மேம்படும். நீண்ட நாள் கவலை தீரும். வீண் அலைச்சல், மருத்துவச்செலவு குறைந்து நிம்மதி வரும்.

**மகரம்:** நல்ல செயல்கள் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். நற்செயல் செய்து புகழ் அடைவீர்கள். உற்சாகமான நாள். பணியிடத்தில் இருந்த பிரச்சினை தீரும்.

**கும்பம்:** கவலைகள் தீரும். பிறரிடம் மனம் விட்டுப் பேச ஆரம்பிப்பீர்கள். நண்பர்களுடன் இருந்த பிரச்சினைகள் இன்று முடிவுக்கு வரும். குடும்பத்தினருடன் ஒருமித்த கருத்து ஏற்படும்.

**மீனம்:** உங்கள் போக்கை மாற்றுவதன் மூலம் நன்மை வரும். பழைய பொருள்களை விற்றுப் புதியதை வாங்குவீர்கள். திறமையாகச் செயற்பட்டு பாராட்டு வாங்குவீர்கள். நண்பர்கள் சந்திப்பு ஏற்படும்.

## தவக்காலச் சிந்தனை

### செபத்தில் நிலைத்திருப்போம்

செபம் என்பது இறைவனுக்கும் எமக்கும், எமக்கும் பிறருக்கும் இடையே உள்ள உறவை ஆழப்படுத்தி தொடர்ந்து பேணி வர உதவும் பாலமாகும். மனித உறவின் நீட்சியும் உச்சமும், எல்லையும் இறை உறவாக மலர்கின்றபோது எழும் அதிர்வுகளில்தான் இறை வேண்டல் பரிமாணமம் பெறுகின்றது. வெறுமனே சுயநல வேண்டுதல் செபமாக அமையாது. அயலவர், சமூகம், நாடு, திருஅவை பூகோள நலன் சார் தேவைகள், பாதிப்புக்களை நிறைவுசெய்ய இறைவனிடம் விண்ணப்பிக்கும் செபம் மேன்மைமிக்கதாக அமையும்.

தூய உள்ளதின் செபம் தூயகம்வரை எட்டும் என்பார்கள்.

குற்றங்களுக்காக மன்னிப்புக் கேட்பதும் மன்னிப்புக்கொடுப்பதும் உள்ளத்தைத் தூயதாக்க உதவும்.

ஏனெனில் மன்னிப்பே இதயத்தைத் தூய்மையாக்கும் சிறந்த சலவைப்பொருள். இதனையே இயேசு "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பதுபோல் எங்கள் குற்றங்களை மன்னியும்" என செபிக்கக் கற்றுத்தந்துள்ளார். எமது வேண்டுதல்கள் வெறும் வார்த்தைகளின் தொகுப்பாக இருக்கக்கூடாது. மாறாக அவை வாழ்வின் வெளிப்பாடாக அமையவேண்டும்.

இறையாட்சிக்கும் திட்டத்துக்கும் எம்மை இசைவாக்கி உல கியல் சோதனைகளை வெற்றிகொள்ளும் வல்லமையையும் இறைபாதுகாப்பையும் செபத்தின் வலிமை நிறைவாகப் பெற்றுத்தரும். தனியாகவும் குடும்பத்தோடும் சமூக குழுமத்தோடும் இணைந்து இறைவனைப் போற்றிப் புகழ்ந்து கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ முயற்சிப்போம்.

[illegible]
கொழும்புத்துறை

## உக்ரைனுக்கு உலக வங்கி 723 மில்லியன் கடனுதவி

கீவ், மார்ச் 10

உக்ரைனுக்கு 723 மில்லியன் டொலர் கடனுதவி வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதியுதவி கடன் மற்றும் மானியம் என இருவகைகளில் வழங்கப்படும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது. உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடங்கி 14 நாள்களாகின்றன.

உக்ரைனின் பல்வேறு குடியிருப்புக்கள், விமான நிலையம், அணுமின்நிலையம் உள்ளிட்டவை ரஷ்யாவின் தாக்குதலில் தரைமட்டமாகியுள்ளன.

இந்த நிலையில், உக்ரைனுக்கு 723 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. (ச-இ)

## தமிழக மாணவர் உக்ரைன் இராணுவத்தில் இணைவு

புதுடில்லி, மார்ச் 10

தமிழகம், கோவையிலிருந்து உக்ரைனுக்குப் பொறியியல் படிக்கச் சென்ற மாணவன் ஒருவர் ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட உக்ரைன் துணை இராணுவத்தில் இணைந்துள்ளார்.

இந்த மாணவன் உக்ரைனின் கார்கீவ் நகரிலுள்ள தேசிய விண்வெளிப் பல்கலைக்கழகத்தில் ஏரோஸ்பேஸ் பொறியியல் படித்து வந்துள்ளார்.

இந்தநிலையில் உக்ரைன் போர் தொடங்கியபின் நகரை விட்டு வெளியேறாது உக்ரைன் இராணுவத்தில் இணைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## ரஷ்யா - உக்ரைன் போரில் பிரபலமாகும் Z எனும் குறியீடு

கீவ், மார்ச் 10

ரஷ்யா - உக்ரைன் போரில், 'Z' எனும் குறியீடு பிரபலமடைந்து வருவது தொடர்பில் சமூகவலைத்தளங்களில் விவாதங்கள் எழுந்துள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு ஆதரவளிப்பவர்களின் அடையாளமாக Z எனும் எழுத்து காணப்படுகிறது எனவும் புடினின் செயல்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் ரஷ்யர்கள் தங்கள் உடைகளில், வாகனங்களில், குடியிருப்புக்களில் Z என்ற எழுத்தை அச்சிட்டு தேசப்பற்றை வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைனுக்குள் நுழைந்த அனைத்து ரஷ்யா இராணுவ வாகனங்கள் மற்றும் போர்த் தளவாடங்களில் இந்தக் குறியீட்டைக் காணமுடிகிறது என உக்ரைன் மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய மருந்துகளுக்கு இரு வாரங்களில் தட்டுப்பாடு

கொழும்பு, மார்ச் 10
நாடு முழுவதும் அரச துறையில் மட்டுமன்றி, தனியார் துறையிலும் அத்தியாவசிய மருந்துகளுக்கு எதிர்வரும் 2 வாரங்களில் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று அரச ஔடதவியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவிக்கையில்;
கடன் சான்றுப் பத்திர விடுவிப்பு, திறைசேரியால் நிறுத்தப்பட்டுள்ள தன் காரணமாக மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. டொலர் பிரச்சினை காரணமாக தனியார் துறையிலும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
குறிப்பாக புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்க்கான மருந்துகள் குறைவடைந்துள்ளன -என்றார். (ஒ-4-இ)

# பிரசவத்தைக் காண கணவருக்கு வாய்ப்பு

## பெரமுன எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 10
அனைத்து மருத்துவமனைகளும் கர்ப்பிணிகளின் வாழ்க்கைத் துணைவர்கள், தங்கள் குழந்தைகளின் பிறப்பைக் காண வசதி ஏற்படுத்த வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன டெனிபிட்டிய கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவ்வாறு குறிப்பிட்டார்.
'பிரசவத்தில் பெண்கள் மிகுந்த வேதனையை அனுபவிக்கின்றனர். பிரசவத்தின்போது ஏற்படும் வலியையும், பிரசவத்தின் பின் ஏற்படும் மகிழ்ச்சியையும் நான் நேரில் கண்டேன்.

> "பிரசவத்தைக் காண கணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்போது, குடும்பங்களுக்குள் பரஸ்பர ஒற்றுமையும், அன்பும் அதிகரிக்கும்"

பெண் என்பவள் பெரும் வலிகளைத் தாங்கி வருகின்றாள்.
பிரசவத்தைக் காண கணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்போது, குடும்பங்களுக்குள் பரஸ்பர ஒற்றுமையும், அன்பும் அதிகரிக்கும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)



# அரிசிக் கொள்வனவில் முறைகேடுகள் இல்லை

## அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10
மியான்மரில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட அரிசி தொடர்பில் வெளியாகும் விமர்சனங்கள் உண்மைக்குப் புறம்பானவை. அதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாட்டின் அரிசித் தேவையைக் கருத்தில் கொண்டு, மியான்மரில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தோம்.
அரிசி கொள்வனவு விலை தொடர்பில் வெளியிடப்படும் விமர்சனங்கள் உண்மைக்குப் புறம்பானவை. மியான்மர் தூதரகமும் அதனை உறுதிப்படுத்தியுள்ளது. அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டுள்ள விலையை விட 15 மில்லியன் டொலர் குறைவான விலைக்கே அரிசியைக் கொள்வனவு செய்துள்ளோம் -என்றார். (ஒ-4-இ)

# பெற்றோலிய முனையத்துக்கு புதிய தலைவர்

இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்துக்குப் புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
நிறுவனத்தின் தலைவரான நாலக்க பெரேரா, அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எம். ஆர்.டபிள்யூ.டிசொய்சா நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-4-இ)

# தரவுப் பாதுகாப்புச் சட்ட வரைவால் கடுமையான தாக்கங்கள் ஏற்படும்

## ட்ரான்ஸ்பரன்சி எச்சரிக்கை

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால், கடுமையான தாக்கங்கள் ஏற்படும் என்று ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா எச்சரித்துள்ளது.
தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டவரைவு மீதான இரண்டாவது வாசிப்புத் தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கையில்;
தற்போதைய வடிவத்தில் இந்த வரைவு நடைமுறைப்படுத்தப்பட்டால், சில உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அவற்றை நீக்கும் வரை இந்தச் சட்ட வரைவை நிறைவேற்றக் கூடாது. சட்ட வரைவை நிறைவேற்ற அவசரப்பட வேண்டாம். பத்திரிகைத் துறை, தகவல் அறியும் உரிமை ஆகியவற்றில் இது தாக்கத்தை ஏற்படுத்தும். தரவுப் பாதுகாப்பு ஆணைக்குழு பரந்த அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும், அது சுதந்திரமானது அல்ல. இதனால் அரசியல் தலையீடுகள் ஏற்படும் -என்றுள்ளது. (ஒ-4-இ)

# கொழும்பை முற்றுகையிடுவோம் முடிந்தால் தடுத்துப்பாருங்கள்

## ஜனாதிபதிக்குச் சவால்

கொழும்பு, மார்ச் 10
பெண்களை ஒன்றிணைத்து, எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பை முற்றுகையிடுவோம். முடிந்தால் ஜனாதிபதி இதனைத் தடுக்கட்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்ன, சபையில் சவால் விடுத்தார்.
நாடாளுமன்றில் புலமைச் சொத்து (திருத்தச்) சட்டவரைவு இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்; எரிவாயு, எரிபொருள், பால்மாவுக்கான நீண்ட வரிசையே இந்த ஆட்சியின் அடையாளமாகும். நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாம் கொழும்பைச் சுற்றிவளைப்பது உறுதி -என்றார். (ஒ-4-இ)

# அமைச்சுச் செயலராக இராணுவ அதிகாரி

கொழும்பு, மார்ச் 10
இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) டபிள்யூ. பீ. பாலித பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.
ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், அவருக்கான நியமனக் கடிதத்தை நேற்று முன்தினம் கையளித்தார். (ஒ-4-இ)

# சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 10
சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.
அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கான மூலப்பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அட்டைகளுக்குப் பதிலாக தற்காலிக அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
அதற்கமைவாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகளுடன் இணையத் தயார் குழப்புகின்றார் ஆனந்தசங்கரி

## கூட்டணி ஆதங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

**நாங்கள் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளோம். தேர்தல் திணைக்களத்துக்கு, கட்சியின் புதிய நிர்வாகக் கூட்டம் தொடர்பான அறிக்கை அனுப்பப்பட்டுள்ள நிலையில், அதனைக் குழப்ப ஆனந்தசங்கரி விரும்புகின்றார் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் த.இராசலிங்கம் தெரிவித்தார்.**



யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முதலில் தோற்றுவிக்கப்பட்டது எமது கட்சி. முப்பெரும் தலைவர்கள் கூடி தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது. ஆனந்தசங்கரி தன்னால் மட்டுமே தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஏனைய கட்சிகளால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்கிறார்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழர்களுக்குச் சரியான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

ஆனந்தசங்கரி உட்பட கட்சியினுடைய உறுப்பினர்கள் பலரும் கலந்துரையாடியபோது இடை நடுவே ஆனந்தசங்கரி, வெளியேறினார். அதன் பின்னர் அங்கு கூடியிருந்த நாங்கள் தற்காலிகமாக ஒரு நிர்வாகத்தை உருவாக்கி, புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்தோம். தற்போது ஆனந்தசங்கரி விரைவில் பொதுச்சபையை கூட்டப் போகிறேன் என்று கூறியுள்ளார். அவரால் அவ்வாறு செய்ய முடியாது. நாங்கள் தேர்தல் திணைக்களத்துக்குப் புதிய நிர்வாகம் தொடர்பாகவும் கூட்டம் கூடியது தொடர்பான அறிக்கையையும் அனுப்பியுள்ளோம். ஆனந்தசங்கரி புதியவர்களை உள்வாங்கி பழையவர்களை பொதுச் சபையில் இருந்து வெளியேற்ற முயற்சிக்கின்றார். புதியவர்களை பொதுச்சபையில் இணைக்க முடியாது.

நாம் அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறி எமக்கெதிராக ஆனந்தசங்கரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருக்கின்றார். கட்சியின் சொத்துக்களை கட்சியின் அனுமதியின்றி அவர் தன்னிச்சையாக விற்பனை செய்துள்ளார் -என்றார். (ஒ-4-20)

## வலி.வடக்கு பிரதேசசபையால் டெங்கு ஒழிப்பு பிரகடனம்



யாழ்ப்பாணம், மார்ச் 10

வலிகாமம் வடக்கு பிரதேசசபையால் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் டெங்கு நோய் பரவலால் ஏற்படும் விளைவுகளில் இருந்து பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இந்தச் செயற்றிட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய வலி. வடக்கில் விடுவிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளைத் தவிர ஏனைய வட்டாரங்களில் ஒவ்வொருநாளும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று வலி. வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் ச.சுகிர்தன் தெரிவித்துள்ளார். (ஒ-14-125)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### இந்தியாவின்...

இணைந்து அனுப்பிய கடிதமும் காரணமாக இருக்கலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்கு பொருளாதார ரீதியில் உதவிகளை வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு இந்திய அரசாங்கம் கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது. 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரியிருக்கின்றது.

இந்தியாவின் நகர்வுகளுக்கு தமிழ்க் கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கோரி இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பியமையும் ஒரு காரணமாக இருக்கலாம். அனைத்துக் கட்சியினரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக இருந்தால் காலம் கனிந்து நல்லதே நடக்கும் என ஏற்கனவே கூறியிருந்தோம். அதன் ஒரு அங்கமாகக்கூட இது இருக்கலாம் - என்றார். (அ-எ-27)

### கச்சதீவு...

பெருவிழா நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், பெருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (அ-எ-27)

### மருத்துவபீட...

அறை எடுத்துத் தங்கியிருந்த இளம் யுவதி ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட போலி அடையாள அட்டையைக் காண்பித்து, மருத்துவ பீட மாணவி என அறிமுகப்படுத்திய குறித்த யுவதி, திருநெல்வேலிப் பகுதியில் வாடகைக்கு அறை எடுத்துத் தங்கியுள்ளார். ஆயினும் அவரது நடவடிக்கைகளில் வீட்டு உரிமையாளருக்குச் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து அவர் கோப்பாய் பொலிஸாருக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளார்.

கோப்பாய் பொலிஸார் அந்த யுவதியிடம் விசாரணை மேற்கொண்டபோது, அவர் மருத்துவபீட மாணவி இல்லை என்பதும், அவர் காண்பித்த அடையாள அட்டை போலியானது என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

அதையடுத்து அவரைக் கைது செய்த பொலிஸார் விசாரணைகளின் பின்னர் அவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிவான் சந்தேகநபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டார். (அ-எ-26)

## சிவலிங்கம் பிரதிஷ்டை

சாவகச்சேரி, மார்ச் 10

மறவன்புலவு ஸ்ரீ ஐயப்பன் தேவஸ்தானத்தில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் சிவலிங்கப் பிரதிஷ்டை, அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது மறவன்புலவு ஸ்ரீ ஐயப்பன் தேவஸ்தான அடியார்கள், தவத்திரு வேலன் சுவாமிகளுக்கு பாதபூசை செய்து பூரணகும்பம் கொடுத்து வரவேற்றதைத் தொடர்ந்து சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. (ஒ-14-159)

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் உள்ள வீட்டிற்கு வீட்டுப்பணிப் பெண் தேவை.

074 290 6268

**வேலையாட்கள் தேவை**

கொழும்பில் இயங்கும் தனியார் பொதிகள் சேவை நிறுவனத்திற்கு தங்கி நின்று பணிபுரிவதற்கு பணியாளர்கள் தேவை.

❖காசாளர் ❖சிட்டை எழுதுநர் ❖உதவியாளர்கள்

உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். (CS 18804C) (4/6)

தொடர்புக்கு:- 076 935 4332

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு பணி வேலைக்கு பணிப்பெண் தேவை (CS 18804A (4/6)

தொடர்புக்கு:- 076 935 4332

**வேலையாள்கள் தேவை**

அச்சக வேலைக்கு ஆள்கள் தேவை

Book Binding & Type Setting

சாயி பிறிண்டர்ஸ்

K.K.S Road, கோண்டாவில்.

077 220 9474 (CS 18797) (3/)

**பணியாளர்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள சுப்பர் மார்கட் நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

01. கணக்கு பதியுனர்.
02. விற்பனையாளர்

ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 25000.00 (CR 37619) (4/6)

தொடர்புக்கு:-077 459 8289

**வேலையாட்கள் தேவை**

முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் மற்றும் உற்பத்தி நிறுவனத்திற்கு பணிபுரிவதற்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

★காசாளர் ★சமையலாளர் ★உதவியாளர்கள்
★உணவு பொதி செய்பவர்கள்
★உணவு பரிமாறுபவர்கள்

உணவு தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 935 4332 (CS 18740) 1-6

**பெயர் மாற்றம்**

மெமோறியல் லேன். மானிப்பாய் வடக்கு மானிப்பாய் இல் வசிக்கும் **யோகரட்டினம் ரஜீவ்** ஆகிய நான் எனது பெயரை **யோகரட்டினம் சஜீவ்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **யோகரட்டினம் சஜீவ்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அச மவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 43 7) (3/6) **யோகரட்டினம் சஜீவ்**

**ஆண், பெண் விடுதி மேற்பார்வையாளர் தேவை**

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் ஆண்கள், பெண்கள் விடுதிக்கான மேற்பார்வையாளர்கள் தேவை.


தகுதி - 35 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. க.பொ.த உயர்த்தரத்தில் மூன்று பாடத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும். முழு நேரமும் விடுதியில் தங்கியிருந்து பணி புரிதல் வேண்டும். சுயவிபரக்கோவையுடன் இன்றிலிருந்து 14.03.2022 திங்கட்கிழமை வரை பாடசாலை நேரத்தில் சமுகமளிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CR 37613) (3/6) 021 222 3456 அதிபர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10
-
08
-
1940



மறைவு
09
-
03
-
2022

# கனகர் பாலசுப்பிரமணியம்

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் பாலசுப்பிரமணியம் நேற்று (09.03.2022) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகர் சின்னக்குட்டியின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், துரைச்சாமி தவமணியின் அன்பு மருமகனும், எழில்வதனா (லண்டன்), மதிவதனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேஸ்வரன் (லண்டன்), தவராசா ஆகியோரின் மாமனாரும், திரவியமலர், காலஞ்சென்றவர்களான இராசதுரை, நல்லசேகரம், சிவனடியார், பாக்கியம், பூரணவதி இரத்தினம் ஏகாம்பரம் (லிங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹரிகாலன், கார்த்திகன், கதிரவன் காவியன், கிருத்திகா, வைஷ்ணவி, சுலோஜன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03 2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

077 785 3333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 05 - 07 - 1943

மறைவு 08 - 03 - 2022

யா/கன்னியர்மடம் மகா வித்தியாலய ஆசிரியை
**திருமதி மேரி ஜக்குலின் நந்தகுமார்**
அவர்களின் பாசமிகு தந்தை

**சிமியோன் அந்தோனிப்பிள்ளை**

அவர்கள் நேற்று முன்தினம் (08.03.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(CR 37616) (4/6)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம் , யா/கன்னியர் மடம் மகாவித்தியாலயம், இளவாலை

## Chundikuli Girls' College Jaffna

### Vacancy

We are a leading private school in Jaffna, founded by the Church Missionary Society.

We are looking for professionally qualified, committed and motivated female candidates for the following vacancies.

**1) Teacher of Mathematics**
- Should possess a degree in the relevant field
- Should be able to teach Mathematics in English medium for Grs 6 - 11

**2) Teacher of Hindu Civilization**
- A graduate of the relevant subject.
- Should be able to teach Hindu Civilization for A/L classes and Tamil and Hinduism for Grs 6-11.

**3) Teacher of Sinhala Language**
- Should be able to teach Sinhala Language for Grs. 3 - 9
- Teaching experience in the relevant subject would be an added advantage

Application should reach us on or before 16th March 2022, with the names of two (2) non-related referees. Please indicate the post applied for, on the top left corner of the envelope. Only shortlisted candidates would be called for an interview

**Principal**
**Chundikuli Girls' College**
**6, Colombogam road Jaffna**
**E-mail:- forwardcgc@yahoo.com**

(CR 37609)(3/6)

உதயன் ஊடாக அனுசரணையில்...

சர்வதேச நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
பிரசாத் பெருடையுடன் வழங்கும்

விஜய்
சூப்பர் சிங்கர்
இசை நிகழ்ச்சி 2022

இந்திய கலைஞர்களுடன் புதுவருட இசை நிகழ்ச்சி





Event Management - Ceylon Art Creation (CAC)
தொடர்புகளுக்கு - 0774718969 / 0767316565

APRIL

இந்நிகழ்சியை அனுசரணைப்படுத்தி விளம்பரம் தர விரும்புவோர்
தொடர்புகளுக்கு 077 471 8969

| | |
|---|---|
| 2nd Saturday | நெல்லியடி மைதானம் மாலை 6.30 மணிக்கு தொடர்புகளுக்கு 077 471 8969 |
| 3rd Sunday | யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ... மாலை 3.00மணிக்கு தொடர்புகளுக்கு - 0767316565 |


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17 - 03 - 1934

மறைவு 07 - 03 - 2022

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
**திரு.கி.சந்திரசேகரன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அந்தோனி கிறகோரி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
வலி கிழக்கு தென்பகுதி, ப.நோ.கூ.சங்கம் - நீர்வேலி
பணியாளர்கள், பணிப்பாளர்கள்

(CR 8035) (4/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிகிரியையும்



கடந்த 10.02.2022 வியாழக்கிழமை இறைவனடி அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் **கந்தையா ஞானசேகரம்** (பெரியதம்பிரான்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 10.03.2022 வியாழக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 12.03.2022 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

131. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
0770880259

(CR 37617) (4/6)

குடும்பத்தினர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02.08.1951

மறைவு 02.03.2020

அமரர்

**வீரவாகு சிவலிங்கம்**

ஆண்டுகள் இரண்டு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள்!-எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்

செருக்கப்புலம் லேன்,
கொக்குவில்.

மனைவி,
மகள்.

(CS 18796) 1-6

## கலாசார நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "இருண்ட பொருளாதாரத்துக்கு ஒளியைத் தேடும் பெண்களின் கடமை" என்ற தலைப்பிலான கருத்தரங்கும் கலாசார நிகழ்வுகளும் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு எழுதுமட்டுவாழ் வடக்கு முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

சோஷலிஸ மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நிகழ்வில், சோஷலிஸ மகளிர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழி சமன்மலி குணசிங்க, சோஷலிஸ மகளிர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் தோழி சரோஜா போல்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-14,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 14 - 06 - 1958



உதிர்வு 06 - 03 - 2022

## கனகசபை பரஞ்சோதி (சோதி)

எச்சாட்டி, சுதுமலையைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பரஞ்சோதி (சோதி) கடந்த (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை தங்கச்சியம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், பத்மாவதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் தங்கரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் இராஜலக்சுமி, காலஞ்சென்ற மகாலக்சுமி மற்றும் விஜயலக்சுமி, பரமேஸ்வரி (ஜேர்மன்) பத்மராணி (ஜேர்மன்), சற்குணராஜா (லண்டன்), கிருஷ்ணமூர்த்தி (சுவிஸ்), பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் துஸ்யந்தன், சுபாசினி (ஜேர்மன்), கிருஷாளினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அகஸ்தியன் (ஜேர்மன்) அவர்களின் அன்பு மாமனாரும், அஸ்மிதா (ஜேர்மன்) அஸ்வின் (ஜேர்மன்), அமிஸ் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உயரப்புலம்
ஆனைக்கோட்டை

தகவல்
குடும்பத்தினர்

(CS 18800) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 08 - 1936



மறைவு 09 - 03 - 2022

## திருமதி சிவயோகம் செல்வராசா

இல. 07 காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளியாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் செல்வராசா நேற்று (09.03.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அப்பாத்துரை பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும் பிறேமிளா, நிர்மலா (லண்டன்), சர்மிளா, நிரோஜினி, சுபாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட பொது வைத்தியசாலை-வவுனியா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமாரன், பாலதாஸ் (லண்டன்), ஞானகுமார், பிரபாகரன், சந்திரகாந்தன் (முகாமைத்துவ சேவை உத்தி யோகத்தர் பனை அபிவிருத்திச் சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்ற தனுசன், மற்றும் சுலக்ஷன், தனுஷிகா, சாங்கவி, வைஷ்ணவி, சங்கீத், அபியா, டினோஷா, மதுஷயன், சாயகி, தணிகேஷ், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.07 காட்டுக்கந்தோர் ஒழுங்கை, 077 334 1996
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 077 388 5246

தகவல்
குடும்பத்தினர்

(CS 43455) (3/6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 03.11.1928

மறைவு 03.03.2022

## திருமதி செல்வரத்தினம் நேசரத்தினம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தொண்டைமானாறு தெஹி வளை, கொழும்பை வாழ்விடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் நேசரத்தினம் அவர்கள் கடந்த (03.03.2022) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் அன்னம் தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான சித்திரவடிவேலு கற்பகம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற நேசரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெயக்குமார், மோகன்குமார், பவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மங்களவதி, ஜெயந்தி, விஜயதிலகன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மயூரன், நிரூபன், துளசி, கேசவன், கேதாரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மாயா, அஞ்சலி, அமீரா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (13.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் 17, Cantley Gardens Bark-ing - Side Essex 1GZ 6QB என்ற முகவரி இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகள் நண்பகல் 12.00 மணிக்கு (Noon) City of London Cemetery & Grematorium Aldersbrook Road London E12 5DQ இல் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
ஜெயக்குமார் : 0044 744 861 3334
மோகன்குமார் : 0044 748 4836 852
பவானி : 001 647 330 4646

(CS 43456) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 367 பொருள்களின்...

இலங்கை தற்போது பெரும் அந்நியச் செலாவணிப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள நிலையில், நிலைமையைச் சமாளிக்க அரசாங்கம் தொடர்ச்சியாக இறக்குமதித் தடைகளை விதித்து வருகின்றது.

அண்மையில், அத்தியாவசியமற்றவை என்று கருதப்படும் 600 பொருள்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மேலும் 367 பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது தடை விதிக்கப்பட்டுள்ள பொருள்களில் பால் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள், பட்டர், ஜோக்கட், அன்னாசி, மங்குஸ்தான் மற்றும் பழங்கள், ஒரேஞ், அவகாடோ, மீன் பாஸ்தா, நூடில்ஸ், இறைச்சிகள், முட்டை, அப்பிள், திராட்சை, பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள், அழகு சாதனப் பொருள்கள், வெளிநாட்டு மதுபானம் மற்றும் பீர் வகைகள், பேரீச்சம்பழம், தண்ணீர், பாதணிகள், இசைக்கருவிகள், விளையாட்டு உபகரணங்கள், வீட்டுப் உபயோகப் பொருள்கள் என்பனவும் அடங்குகின்றன.

அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் மட்டுமே இத்தகைய பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்றும், அதற்காக சிறப்பு அனுமதி பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடைகளால் பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், பொருள்கள் பலவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. தற்போது மேலும் பல பொருள்களுக்கு இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பொருள்களின் விலைகளும் சடுதியாக அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. (அ-எ-இ)

## வாக்குக்கேட்டு...

எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக மக்கள் காலையிலிருந்து நீண்ட வரிசையில் காத்திருந்தனர். எரிவாயு சிலிண்டர்களுடன் வாகனம் வந்ததைத் தொடர்ந்து, வரிசையை சிலர் குழப்பினர். அவ்வாறு குழப்பியவர்களை பொலிஸார் பாதுகாத்தனர் எனக் குற்றஞ்சுமத்தி, மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, நாம் எரிவாயுவுக்கும், மாவுக்கும், எரிபொருளுக்கும் வரிசையில் நிற்கின்றோம். இவர்களுக்கு (ராஜபக்சக்கள்) வாக்களித்ததால் கிடைத்த பரிசு போதும். மக்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டு இப்படிச் செயற்படுகின்றார்கள். இது எமக்குப் போதாது. நீங்கள் வெற்றி பெறுவதற்காக நாம் என்னவெல்லாம் செய்தோம்? இன்று நீங்கள் எம்மை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இப்போது நாம் துன்பப்படுகின்றோம். விவசாயம் செய்ய முடியாது தவிக்கின்றோம். வாக்குக்கேட்டு வந்தால் இடிதான் விழும். தும்புத்தடியைத்தான் தூக்குவோம்-என்று ஊடகங்களுக்கு பிரதேச மக்கள் ஆவேசத்துடன் தெரிவித்தனர். (அ-ஒ-5)

## பேரறிவாளனுக்கு...

வழக்கில் தண்டிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேர் தற்போது தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

பேரறிவாளன் 32 ஆண்டுகளாக இந்த வழக்கில் சிறையில் இருப்பதைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள் எல். நாகேஸ்வரராவ், பி.ஆர். கவை அடங்கிய அமர்வு, அவருக்கு பிணை வழங்கி உத்தரவிட்டது.

பேரறிவாளனின் 32 ஆண்டுகால சிறைவாசத்தில் அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்குவது இதுவே முதல் முறையாம். "மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்தாலும், மனுதாரர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருப்பதைக் கருத்திற்கொண்டு அவருக்கு பிணை வழங்குகிறோம்" என நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

விசாரணை நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர் பிணையில் விடுவிக்கப்படுவார் என்றும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்திலும் அவர் ஜோலார்பேட்டை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக வேண்டுமென்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் தற்போது தண்டனை அனுபவித்துவரும் 7 பேரில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் சாவுத் தண்டனை 2014ஆம் ஆண்டில் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது பேறறிவாளனுக்கு மூன்று முறை சிறை விடுப்பு அளிக்கப்பட்டிருந்தும் அவர் எந்தவிதத் தவறுகளும் செய்யவில்லை என்பதைச் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர். தண்டனைக் காலத்தில் அவருடைய நடத்தை சிறப்பாக இருந்ததையும் அவர் தனது கல்வித் தகுதியை வளர்த்துக் கொண்டது குறித்தும் சிறையில் உள்ள நூலகத்தில் உதவிசெய்தமை தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. அனைத்தையும் ஆராய்ந்த நீதிபதிகள் பேறறிவாளனுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டனர். (அ-எ-இ)

## இரவோடு...

அமைக்க முயற்சிக்கப்பட்டபோது, நேற்றுக் காலை பொதுமக்களும், உள்ளூர் மட்ட அமைப்புக்கள், அரசியல்வாதிகள் கடும் எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

அந்தப் பகுதியில் தமிழ் பேசும் மக்கள் காலம்காலமாக வாழ்ந்து வரும் நிலையில், பௌத்த பிக்குகள் அடங்கிய குழு ஒன்று அங்கு அத்துமீறி விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு விகாரைக்கான அத்திபாரம் வெட்டப்பட்டு, நேற்றுக்காலை அடிக்கல் நடுவதற்கான ஏற்பாடுகள் அந்தக் குழுவால் முன்னெடுக்கப்பட்டது. இந்தத் தகவலை அறிந்த பிரதேச மக்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் சம்பவ இடத்தில் கூடி எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லாஹ், கிழக்கு மகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, சட்டத்தரணி எம்.ஏ. அன்சில், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.தவம் உட்படப் பிரதேச அரசியல்வாதிகள் பலரும் அங்கு சென்று அத்துமீறிய விகாரை அமைப்புக்கு எதிர்ப்பை வெளியிட்டனர். இந்த விடயம் தொடர்பில் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் ஊடாக அம்பாறை மாவட்டச் செயலரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

பௌத்த பிக்குகள் அடங்கிய குழு மக்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டது. பிரதேசமக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பை அடுத்து விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் நிறுத்தப்பட்டன. பௌத்த பிக்குகள் அடங்கிய குழு அங்கிருந்து அகன்றது.

அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றுத் தொன்மையான பூமியான முள்ளிக்குளம் மலையடிவாரத்தில் முஸ்லிம் மக்களே அதிகம் வாழ்கின்றனர். அவர்களுக்குச் சொந்தமான காணியிலேயே பௌத்த விகாரை அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் விகாரை அமைக்க ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (அ-எ-இ)

## கட்டுத்துவக்கு...

கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் படுகாயமடைந்த அவர், மல்லாவி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆயினும் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரது உடல் மல்லாவி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெட்டாங்கண்டல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-19)

## பட்டினிச்...

விலகுவதே சிறந்தது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் சென்ற பின்னர் சர்வக் கட்சி மாநாட்டைக் கூட்டி இனி ஒன்றும் செய்ய முடியாது.

இந்த அரசு புத்திஜீவிகள் மற்றும் பொருளாதார விற்பன்னர்களின் ஆலோசனைகளைக் கேட்காமல் அதிகார மமதையில் ஆட்சி நடத்தியதால்தான் நாடு இப்படிச் சீரழிந்துள்ளது. இதை ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரச தரப்பினரும் இன்னமும் புரிந்துகொள்ளாமல் செயற்படுகின்றனர்.

இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய 69 இலட்சம் பேர் உள்ளிட்ட அனைத்து மக்களும் இன்று வீதிகளில் பொருள்களை வாங்க வரிசையாக நிற்கின்றனர். பொருள்களின் விலையேற்றத்தாலும் பொருள்களின் பற்றாக்குறையாலும் மக்கள் இன்று திண்டாடுகின்றனர்.

பட்டினியால் மக்கள் செத்து மடிவதற்கு முன் இந்த அரசு உடன் பதவி விலக வேண்டும். அப்போதுதான் நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கும் வகையில் ஜனநாயக ஆட்சி மலரும் -என்றார். (எ-22)

## ஆட்டத்தை...

நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்டச் செயலர் க.மகேசனுக்கு, பிரதமர் அலுவலகத்திலிருந்து நேற்றுக் கடிதமொன்று அவசர அவசரமாக அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவுக்கு பிரதமர் அலுவலகப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத் காசிலிங்கத்தின் ஒப்பந்தத்துடன் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தின் பிரகாரமும் 2022ஆம் ஆண்டுக்கான அரசின் வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தி உச்ச பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காகவும் 2022ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களின் அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை கிரமமாக நடத்துவதற்கான முக்கியத்துவத்தின் பால் தங்களின் மேலான கவனத்தை ஈர்க்கின்றேன்.

அதன் அடிப்படையில் 2022ஆம் ஆண்டுக்கான நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டங்களுக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி பெறுவதற்காக பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களை நடத்துவதற்கு ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## மருந்துப்...

சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவுடன் இணைந்து மருந்துகளை இறக்குமதி செய்வதற்கும், அதற்கான கடன் வசதியைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் இரு வாரங்களில் அரச துறைகளில் மட்டுமன்றி தனியார் துறைகளிலும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று அரச ஔடதவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் திலகரட்ண எச்சரித்துள்ளார்.

கடன் சான்றுப் பத்திர விடுவிப்பு திறைசேரியால் நிறுத்தப்பட்டுள்ளதால் மருந்து வகைகளை இறக்குமதி செய்ய முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மின்வெட்டு!...

மின் துண்டிப்பு தொடர்பில், இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

A முதல் L வரையான வலயங்களில் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதிக்குள் இரண்டரை மணித்தியாலமும், மாலை 6 மணி முதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதிக்குள் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடமும் மின்தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

P முதல் W முதலான வலயங்களில், காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரையான காலப்பகுதிக்குள் ஒரு மணிநேரம் மின்தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கூட்டமைப்பின்...

தற்போது யோசிக்கிறார்கள். அதை நல்ல விதத்தில் அணுகுவோம் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

43 வருடங்களாக மக்களுக்கு எதிரான ஒரு சட்டமாக பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் இருக்கின்றது. நல்லாட்சிக் காலத்தில் அரசாங்கத்தோடு சேர்ந்து பயணித்த கூட்டமைப்பினர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் செயற்பாட்டை அப்போதே நிறைவேற்றி இருக்கலாம். ஆனால், தமது நண்பருக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதற்காக அதைச் செயற்படுத்தாமல் விட்டிருந்தார்கள்.

காலம் கடந்துள்ளபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணியினர் இப்போதாவது இதைச் செய்கின்றனர். அதை நாங்கள் நல்ல விதத்திலே பார்ப்போம் - என்றார். (அ-எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிப்றிக்கோவுக்கு நீதி வேண்டும்!

## சிறீதரன் எம்.பி. அழுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ். வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் அருள்குமாரன் ஜோன் ஜிப்றிக்கோ. இளவாலை பொலிஸாரால் தாக்கப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் சம்பவத்தில் நீதி கிடைக்க வேண்டும்.

பொலிஸாரினதும் அரச ஆதரவு அல்லக்கை அரசியல் வாதிகளினதும் அராஜகங்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்.வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் அருள்குமாரன் ஜோன் ஜிப்றிக்கோ இந்த மாதம் 3ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அவரது வீட்டுக்கும் இளவாலை பொலிஸ் நிலையத்துக்கும் சுமார் 500 மீற்றர் தூரமே காணப்படுகின்ற நிலையில், பொலிஸார் இந்த முறைப்பாட்டை விசாரிக்க வரவில்லை.

அதன்பின்னர் 5ஆம் திகதி எதிர்த்தரப்பினர் செய்த முறைப்பாட்டை விசாரிப்பதற்காக பொலிஸ் நிலையத்துக்கு ஜிப்றிக்கோவின் குடும்பத்தினரை அழைத்து பொலிஸார் தாக்கியுள்ளனர். பொலிஸாரின் இந்த அடாவடித்தனத்துக்கு நீதிகிடைக்க வேண்டும். வடக்கில் பொலிஸாரும் அரசாங்கத்தின் அல்லைக்கைகளான அரசாங்க ஆதரவு அரசியல் கட்சிகளும் அராஜகத்தில் ஈடுபடுகின்றனர். இது உடனடியாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.(ம-22)

# டெங்கு நுளம்பு அழிப்பு



வவுனியா,மார்ச் 10
வவுனியா நகரில் சுகாதாரத்துறையினரால், டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குருமன்காடு பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், மக்கள் குடியிருக்கும் பகுதிகள் அனைத்தும் நேற்றுப் பரிசோதனை செய்யப்பட்டன.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-110)


### பணியாளர்கள் தேவை

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தில் பணியாற்றுவதற்கு பணியாளர்கள் உடன் தேவை.

**077 378 8746**

### வாகனம் விற்பனைக்கு

Toyota Aqua 2012 பாவனையிலுள்ள hybrid கார் விற்பனைக்கு உண்டு.
இரண்டாவது உரிமையாளர் Reg 2014
Service Records are available
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.
(CS 18779) 3/6

**தொடர்பு : 076 226 9153**

### யாழ் வேலைவாய்ப்பு நேர்முகத்தேர்வுகள்

12.03.2022 சனிக்கிழமை 10.00 AM - 12 PM
இடம் : DEWMAS , 51, Amman Road, Nallur.
IT Company, Finance Company, Pharmacy, Media, Press, Private Hospital போன்ற நிறுவனங்களின் 20 இற்கு மேற்பட்ட வேலைவாய்ப்புகளுக்கு நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும்.

**0741 383 368, 077 773 3368**

### புதிய பிரிவுகள் ஆரம்பம் 12/03/2022

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - I ,II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes.

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat [ Sri Lanka]**
**[AA1, AA2, AA3]**
Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English

**G.C.E. A/L பெறுபேற்றினை எதிர் பார்திருப்பவர்களும் கற்கலாம்.**

**Certificate Course in English**
19 Batches have successfully Completed the course.

**கலை, வர்த்தகப்பிரிவு**
G.C.E. A/L 2022,2023

Further Details: **Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382
021 222 9149
077 440 5917
(IN 16947) (3/6)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஸன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.